சத்திவிநாயகன் துணை.

திருச்சிற்றம்பலம்.

சிவசத்திதோத்திரமஞ்சரி.

ஸ்ரீகண்ணங்குடிசுவாமிகள்

மாணவகராகிய

காவிரிப்பூம்பட்டினம்

சிவராஜயோகமடம்

ஸ்ரீமத் சின்மயானந்தசுவாமிகள்

அருளியது.

சென்னை

ஜீவகாருண்யவிலாசம் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்க௵ மேடரவி.

1907

சாத்துகவி.

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

தேவிசிவ சத்தியினற் றிருவருளை யேயெவருந் தியானஞ் செய்வா, ஞவினிக்கத் தோத்திரமஞ்சரிச் சொற்று னவரசமு நனிவிளங்கக், காவிரிப் பூம் பட்டினத்துச் சிவராஜயோகநற் கவின்மடத்திற், றீவிரத ரத்தொளிருஞ் சின்மயா னந்ததே சிகன்றான் மாதோ.

உ

தேவிசகாயம்.

சிறப்புப்பாயிரம்

கோயிலாங்குடி சொக்கலிங்க

சுவாமிகள் மாணாக்கரும்

திருவொற்றியூர் வாசியுமாகிய

ஸ்ரீமத்-இராமய்யதேசிக சுவாமிகள்

இயற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருமலிசைவச்சீர் வண்டாமரை
மருமலர் மலர்ந்துவளம் பெறவொளிர்தரு
சிவமணங்க மழுந்தெய்வத் தலங்களுட்
தவமிகுந்தோங்கும் தனிக்காவிரிப்பூம்

பட்டினமென்னும் பழம்பதியதனில்
அட்டசித்திகளுட னறிவறிந் துயர்ந்தோர்
பதினெண்சித்தர்கள் பற்பலமுனிவர்
அதிதிதன்மைந்தரய னரிமுதலோர்
வந்துநம்பரசிவன் மலரடிபரவச்
சிந்தனையுதவும் சிறப்பினைவாய்ந்த
வொளிர்சிவராஜயோக மடந்தனி
லொளிதரு கல்வியுட்டிளைக்கும் புனிதன்
நன்மையேவடிவாய் நற்றவம்புரியுஞ்
சின்மயானந்தனெனத் திகழ்ந்திடுவோன்
சாந்தமும்நோன்புந் தவமுமடக்கமும்
சார்ந்தவரெவர்க்குந் தழைத்திடவருள்வோன்
பிறவிநோய்நீங்கப் பிறங்குமெய்யுணர்வுந்
துறவுநிராசை துலங்குமெய்த்தவத்தோன்
சிற்பரம்பொருளாந் தேவிதன்புகழைக்
கற்பதற்கெளிதாய்க் கனிந்துதேனூறச்
சொற்ப சுந்தமிழாற்றொகுத்துத் தருமெனப்
பற்பலவன்பரும் பன்முறைவேண்டத்

தான்பெறும்பேறு சகமெலாம்பெறவே
வான்பெருங்கருணை வழங்கிடுமெழிலி
பரமசிற்சத்தி பராபரைபூரணி
திரமிகுசிற்பரை தேவிதன்புகழா
முதநியிற்படிந்தவ் வுதகமுண்டெழுந்து
முதுசிவசத்தி கவசமேமுதலாம்
பிரபந்தமெனும் பேரருண்மழையை
அறமுதல்நான்கு மமையப்பெய்தது
எத்திசையோரு மிந்தநூல்கற்கில்
எத்திறவினையு மிமைப்பிலகன்று
பத்தியங்கடலுட் படிந்தரனருளால்
சித்திபெற்றுலகிற் சிறந்துவாழ்குவரே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சத்திவிநாயகன்றுணை.

சிவசத்திஸ்தோத்திரமஞ்சரி.

சிவசத்திகவசம்.

விநாயகர்துதி.

சத்திவல்லபை-நித்தமகிழ்ந்திடுஞ்
சுத்தநிராமய-வத்தியைப்போற்றுவாம். க

சிவபெருமான்.

நித்தவமல-முத்தநிராமய
சுத்தவியாபக-வத்தனைப்போற்றுவாம். உ

சத்தி.

சத்துஞ்சித்து-மொத்துநடத்து
நித்தியானந்த-சத்தியைப்போற்றுவாம். ௩

குரு.

நித்தமாயேக-முத்தியளித்திடுஞ்
சுத்தமெய்வடிவை-நித்தலும்போற்றுவாம். ௪

சுப்பிரமணியர்.

அத்துவாமார்க்க-நித்தலுநீங்காச்
சத்திவேலுடைச்-சுத்தனைப்போற்றுவாம். ரு

வீரபத்திரர்.

ஒத்திடாத்தக்கன்-முத்திபடவேள்விச்
செத்திடத்தோன்று-முத்தனைப்போற்றுவாம்.

வைரவர்.

அடியரிடுக்கண்-படுவதைநீக்க
முடிகிடுஞ்சூல-வடுகனைப்போற்றுவாம். எ

நந்தீசர்.

அந்திபும்பகலும்-வந்தனையடியார்
சிந்தையைக்காக்கு-நந்தியைப்போற்றுவாம். அ

சமயகுரவர்.

சம்பந்தரப்பர்-உம்பரர்சுந்தரர்
நம்பும்வாசகர்-செம்பதம்போற்றுவாம். கூ

அறுபத்துமூவர்.

சுந்தரன்றொகுத்த-முந்தியவடியார்
அந்தமிற்பதத்தைச் சந்ததம்போற்றுவாம். ய

மற்றையபெரியர்.

சித்தர்யோகர்-முத்தர்முனிவர்
பத்தர்நிராமயர்-நித்தம்போற்றுவாம். ௰௧

சண்டேசர்.

அண்டர்நாதனைப்-பண்டுபூசித்தவர்
கண்டுபோற்றிடுஞ்-சண்டேசனைப்போற்றுவாம்

அவையடக்கம்.

சிவசத்தி யின்பெருமை தேர்ந்தியான் சொல்லத்
தவஞ்சற்று மின்மையாற் சான்றோர்—நவமுற்ற
புன்சொல்லி னூடே பொருந்துசிவ மந்திரத்தா
னன்சொல்லாக் கொள்வர் நயந்து.

உ

சிவமயம்.

சிவசத்திகவசம்.

காப்பு.

சத்தியின்முன்னே ன்
சத்தியினருளா ற்
சத்தியின்கவச ஞ்
சத்தியாய்ச்சாற்றுதும்.

அகவல்.

திருவுடையுலகஞ் சீருறவிளங்க
அருவாயுருவா யல்லதாய்நின்ற
உருவாயுயிருக் குயிராய்மன்னிக்
கருவுட்கருவாய்க் கலந்துருபொருந்தி
வினைவழியாக்கி யளித்துவீட்டுந்
தனைநிகரொவ்வாத் தாயேவருக
நான்மறைச்சிலம்பணி நங்கைவருக
மேன்மேலின்பம் விளைப்பாள்வருக

நற்பட்டுடைசேர் நல்லாள்வருக
அற்புதமேகலை யணிந்தாள்வருக
கச்சணிதனத்தாள் கடுகிவருக
அச்சந்தவிர்க்கு மாயிவருக
நாகாபரணி நலமுறவருக
யோகிகளிதயத் துறைவாள்வருக
வேலும்வில்லும் விளங்கிடுவாளுஞ்
சூலம்பாசஞ் சொலித்திடுமழுவும்
பற்பலவாயுதப் படைகள்செறிந்த
அற்புதக்கரத்தா ளமர்ந்துவருக
அபயவரத மளிப்பாள்வருக
உபயபதமு முடையாள்வருக
உத்தரீயத்தோ ளுடையாள்வருக
முத்தணிமாலை மொய்குழல்வருக
மங்கலங்கழுத்தில் மகிழ்ந்தாள்வருக
பொங்கியதோடு புனைந்தாள்வருக
நாண்மலர்முகத்தா ணயந்துவருக
சேண்கிளர்மணிமுடிச் செல்விவருக
கருணைசிந்து கண்ணுள்வருக
அருணமேனி யம்பாள்வருக
சிவனிடம்பிரியாச் சேயிழைவருக

பவமதைத்தீர்க்கும் பராபரைவருக
மாலின்றங்கை மலைமகள்வருக
பாலின்மொழியாள் பரிந்துவருக
மாலயன்முதலாந் தேவர்கள்வாழ்வை
யேலுறக்கொடுக்கு மேந்திழைவருக
இஷ்டரைக்காக்கு மிறைவிவருக
துஷ்டரையடக்குந் துரைச்சிவருக
அட்டமாசித்தி யளிப்பாள்வருக
திட்டமாய்முத்தி சேர்ப்பாள்வருக
மங்கைவருக மாதாவருக
சங்கரிவருக சாம்பவிவருக
கௌரிவருக கல்யாணிவருக
சௌரிவருக சௌந்தரிவருக
முக்கண்ணிவருக முதல்விவருக
செக்கர்நிறத்தான் றேவிவருக
அமரிவருக வயிராணிவருக
குமரிவருக குண்டலிவருக
அமலைவருக வன்னைவருக
நிமலைவருக நீலிவருக
விமலைவருக விசையைவருக
கமலைவருக கபாலிவருக

ஐயைவருக வாரணிவருக
தையல்வருக தயாபரிவருக
மோகினிவசனி முந்திவருக
நாகபாசத்து நாரணிவருக
கங்கைவருக கங்காளிவருக
செங்கண்பாலைச் செல்விவருக
சித்திமுத்திகள் சீருறவளிக்கும்
அத்திமாமுகனை யளித்தாள்வருக
அண்டரண்டமு மலறிடமுனிவாற்
கண்டனைசெய்து கடுகியசூரரைக்
குலைத்திடவேண்டிக் குமரனைப்பெற்ற
குலமுதற்சத்தி கோமளைவருக
தக்கனையழிக்கச் சடையோன்காளியை
மக்களாய்ப்பெற்ற மங்கலைவருக
மாலின்செருக்கின் வலியையழிக்கப்
பாலனுய்வடுகனைப் பயந்தாள்வருக
ஓம்நமோநாரா யணியேவருக
ஆம்நமோசிவ அம்பாள்வருக
வட்டமுக்கோணம் மருவியசக்கரம்
மிட்டபீடமா யேற்பாள்வருக
ஓங்காரிவருக உமையவள்வருக

ஆங்காரிவருக அம்பிகைவருக
ரீங்காரிவருக இறைவிவருக
ஸ்ரீங்காரிவருக சிற்பரைவருக
ஐயுங்கிலியு மடைவுடன்சவ்வும்
வையம்போற்றும் வராகிவருக
ஓம்-ஓம்-ரீங்-அம் ஸ்ரீயுங்கிலியும்
வம்-வம்-ரீயும் வாலைவருக
ஓம் நய மயந் தம்பனிவருக
ஓம் மய நயம மோகினிவருக
ஓம்பவ்சிவய வசீகரிவருக
ஓம்சிவயவசி மாரணிவருக
ஓம்வசியசிவ உச்சாடணிவருக
ஓம்பநமநய ஆகிஷ்ருணிவருக
ஓம்வயசியவ வித்வேஷணிவருக
ஓம்சியவயசி பேதனிவருக
ஸ்ரீயும்ஐயும் கிலியுஞ்சவ்வும்
ஸ்ரீயும்றீயும் சேர்வாள்வருக
ஐயுங்கிலியுஞ் சவ்வும்ஸ்ரீயும்
றீயும்ஸ்ரீயும் இசைவாள்வருக
கிலியுஞ்சவ்வும் ஸ்ரீயும்றீயும்
ஸ்ரீ யும்ஐயும் ஏற்பாள்வருக

சவ்வும்ஸ்ரீயும் ரீயும்ஸ்ரீயும்
ஐயுங்கிலியும் அமர்வாள்வருக
ஸ்ரீயும்ரீயும் ஸ்ரீயும்ஐயும்
கிலியுஞ்சவ்வும் கிரியாள்வருக
ரீயும்ஸ்ரீயும் ஐயுங்கிலியும்
சவ்வும்ஸ்ரீயும் சார்வாள்வருக
ஓம்றீங்ஸ்ரீயும் அம்நமசிவய
ஓம்றீங்ஐயும் இம்சிவயநம
ஓம்றீங்கிலியும் உம்சிவயவசி
ஓம்றீங்சவ்வும் எம்-ஏம்-சிவசிவ
ஓம்றீங்ஸ்ரீயும் ஓம்ஓம்வசிவசி
ஓம்சிம்ஸ்ரீங்லம் நம்பவைருக
ஓம்அம்உம்ஆம் ஆம்இம்எம்ஓம்
ஓம்ஈம்ஊம்ஆம் ஆம்ஏம்ஓம்றீங்
கங்கங்கங்கங் கணகணஸ்ரீறீங்
சங்சங்சங்சங் சரவணபவறீங்
டம்டம்டம்டம் டமரகடரீறீங்
தம்தம்தம்தம் தகுகுணத்ரீறீங்
பம்பம்பம்பம் பரிகணப்ரீறீங்
யம்யம்யம்யம் யாயாகினிறீங்
ரம்ரம்ரம்ரம் ராரீரூறீங்

லம்லம்லம் லாலீலூறீங்
வங்வங்வங் வடுகிஸ்ரீறீங்
சிங்சிங்சிங் சிங்சிங்சிறீங்றீங்
வங்சிங்வங்சிங் வங்சிங்வராறீங்
சிங்வங்சிங்வங் சிங்வங்சிராறீங்
ஷங்ஷங்ஷங் சரபஸ்ரீறீங்
ளங்ளங்ளங் ளாளாங்கிலீறீங்
றம்றம்றம் றம்றம்ஸ்ரீறீங்
நம்நம்நம் நவகுணஸ்ரீறீங்
நசிநசிநசிநசி நசிநசிநசிநசி
மசிமசிமசிமசி மசிமசிமசிமசி
நசிமசிநசிமசி நசிமசிநசிமசி
மசிநசிமசிநசி மசிநசிமசிநசி
கசிகசிகசிகசி கசிகசிகசிகசி
தசிதசிதசிதசி தசிதசிதசிதசி
வசிவசிவசிவசி வசிவசிவசிவசி
சிவசிவசிவசிவ சிவசிவசிவசிவ
அங்அங்அம்சிவ ரங்லிங்உம்சிவ
சிங்சிங்றீங்சிங் உம்றீங்ரும்ரும்
லங்லங்நம்சிம் கம்கம்கிலிசிம்
சிம்சிவசிம்றீங் சிங்சிறீங்சிம்றிங்

சிவசத்திகவசம்.

றங்றங்நம்றிங் அங்சிறிங்லங்சிங்
அம்சிம்சிறிங்றிங் சிம்சிறீங்லங்சிங்
ஓம்சிறீங்சிம்சிம் சிவயநமஓம்
உம்கிலிஅங்லங் அம்சிவயநம்
ஓம்வங்சிங்ரங்ரங் சிவயநம
ஓம்வயநமசி உம்லிங்சிவயநம
ஓம்நங்கிலிநவ மவசிவயநம
ஓம்நசிமசிவசி சிவசிவயநம
ஓம்அங்அங்லங் றிங்சிவயநம
ஓம்அம்உம்நம் சிம்சிவயநம
ஓம்சிம்கிலீகிலி நம்சிவயநம
ஓம்சிவசிவாநசி மசிசிவயநம
ஓம்மங்கிலிசிங் சிங்சிவயநம
ஓம்மசிமசிவய நமசிசிவயநம
ஓம்ரிங்ரிங்சங் ரிங்சிவயநம
ஓம்சிங்சிவாமங் வசிசிவயநம
ஓம்லங்லங்ருங் றீங்சிவயநம
ஓம்லாலீ லுலம் சிங்சிவயநம
ஓம்சிவாசிவசிவ சிவசிவஸ்ரூப
ஸ்ரீங்றீங்மந்தர ஸ்ரீங்காரிவருக
வருகவருக மனோன்மணிவருக

சிவசத்திதோத்திரமஞ்சரி.

பரிவுடன்காக்கப் பார்ப்பதிவருக
இணையடியெளியேன் முடியிலிருத்தித்
துணையாய்க்காக்க சுந்தரேஸ்வரிவருக
அணங்கியசிகை யந்தரேஸ்வரிகாக்க
வணங்குறுசிரம் வாமேஸ்வரிகாக்க
எழினிறைவதனமி ராஜேஸ்வரிகாக்க
கழிதராநெற்றிக் காமேஸ்வரிகாக்க
புருவமிரண்டும் புவனேஸ்வரிகாக்க
பருவிழியிரண்டும் பரமேஸ்வரிகாக்க
செவியிரண்டுஞ் செகதீஸ்வரிகாக்க
கவியிருநாசிகலை யேஸ்வரிகாக்க
அவிழ்ந்திடுமிதழனந் தேஸ்வரிகாக்க
குவிழ்ந்திடுவாய்கும ரேஸ்வரிகாக்க
நெருங்கியபறகள் நிர்மலேஸ்வரிகாக்க
மருங்கியசுவைநா மந்தரேஸ்வரிகாக்க
மோவாய்க்கழுத்து முதலேஸ்வரிகாக்க
தாவாத்தோள்கள் சர்வேஸ்வரிகாக்க
கைகளிரண்டுங் கபா லேஸ்வரிகாக்க
மையுமார்பு ஞானேஸ்வரிகாக்க
அழிந்திடாவயிறம ரேஸ்வரிகாக்க
சுழிந்திடுமுந்தி சுகந்தேஸ்வரிகாக்க

சிறுபுறமுதுகுசிற் பரேஸ்வரிகாக்க
மறுவிலாப்பக்க மயேஸ்வரிகாக்க
இடையாநடுவிந் த்ரேஸ்வரிகாக்க
படையாங்குறிபங் கயேஸ்வரிகாக்க
வாமமிரண்டு மா தேஸ்வரிகாக்க
நேமச்சானு நிற்குணேஸ்வரிகாக்க
கணைக்காலிரண்டுங் காரணேஸ்வரிகாக்க
இணையாம்பதங்க ளீசேஸ்வரிகாக்க
தத்துவமெல்லாஞ் சங்கரேஸ்வரிகாக்க
நித்தியவுயிரை நிட்களேஸ்வரிகாக்க
கலந்தவுடலுங் கருவியுமுயிரும்
பொரிந்திடும் பூரணேஸ்வரிகாக்க
புன்மைப்புலனின் போக்காய்த்திரியும்
வன்மைமனதை வல்லேஸ்வரிகாக்க
காகினியோடிக் கழியும்வாகியைக்
கேசரிவழி கேசேஸ்வரிகாக்க
எட்டுமிரண்டு மொன்றுமிணங்கி
ஓட்டிவாழ வுமாமேஸ்வரிகாக்க
மூலக்கனலை யெழுப்பிமுடியின்
பாலைப்பருகப் பஞ்சேஸ்வரிகாக்க
ஒருவழிசுழியி னெழுகிடும்மூதைத்

தருவழிகொள்ளத் தண்ணேஸ்வரிகாக்க
மண்டலமூன்றும் மருவிப்பொருந்திக்
கண்டுசுகிக்க காலேஸ்வரிகாக்க
வாயுவழக்கை யறிந்துமதியாற்
றீயிற்செலசிவ னேஸ்வரிகாக்க
தசநாதத்தின் சார்வற்றன்னிலே
வசமுமாறவை யேஸ்வரிகாக்க
நான்றநாமுனே நானசையாவிதி
தோன்றுசுகஞ்சோ மேஸ்வரிகாக்க
ஆக்கைமுழுது மமுதைநிரப்பித்
தேக்கிவாழச்சிங் கேஸ்வரிகாக்க
கருத்தைக்கபால வாயிற்கருதி
நிருத்தங்காண நிமலேஸ்வரிகாக்க
பஞ்சாக்கரத்தின் பயனேயேயறிந்
தஞ்சாதிருக்கரு ளேஸ்வரிகாக்க
சொல்லுரையற்ற சுகாநந்தத்தைப்
புல்லிப்புணரப் புங்கேஸ்வரிகாக்க
சுகத்திற்சுகமாய்ச் சும்மாவிருக்க
இகத்திற்றேற்றி யீஸ்வரியேகாக்க
மனத்தால்வாக்கால் மருவியபிழையும்
மினத்தாற்சார்ந் தெய்தியபிழையும்

ஆக்கைதன்னு லணைந்திடுபிழையும்
தாக்கைம்புலனுற் சார்ந்திடுபிழையும்
துதியாப்பிழையுந் தொழாஅப்பிழையும்
பதியாவுணர்வைப் பதியாப்பிழையும்
எத்தனையெத்தனை யெளியேன்பிழைக
ளத்தனையும்பொறுத் தாள்வாய்நீயே
பெற்றவள்நீயே பிள்ளையுநானே
உற்றவணீயா லுன்மகவாக
அடியேன்பிழைக ளனைத்தும்பொறுத்துப்
படியிற்றாயாய்ப் பரிந்துகாக்க
சண்டனென்மேற் சார்ந்திடவெண்ணிற்
றண்டனைசெய்து தமியனைக்காக்க
வாதபித்தம் மருவியவையம்
தீதுறுதொந்தச் சேர்க்கைதன்னால்
நணுகியேநாலா யிரத்திநானூறு
குணமாம்வியாதி குலைகுலைந்தோடப்
பில்லிசூன்யம் பேய்பூதங்கள்
கல்லெறிமுனி காட்டேரிவீரன்
மாடன்இருளன் வன்னிப்பிசாசு
காடன்பேய்ச்சி காளிகூளி
சேட்டைசெய்யுந் தேவதையெல்லாம்

வாட்டமுற்று வணங்கியேகிட
நல்லபாம்பின் நற்கொடுவிஷங்கள்
வல்லதெல்லாம் மாறிநீங்கிட
விரியன்செய்யான் மேவியவிஷமாய்
உரியதெல்லா முடல்விட்டோடச்
சிங்கங்கரடி திண்புலியானை
துங்கமேனஞ் சுணங்கனோரி
எல்லாமிருகமு மென்னைக்கண்டாற்
பொல்லாக்கொடுமை யடங்கிப்பொலியப்
பட்சிபார்வை பறந்துநசியச்
சட்சுதோஷம் சாராதொழிய
அட்டதிக்குள்ளே ரனைவருமென்னை
இட்டமாய்நாடி யிசைந்துமகிழச்
சத்துருவென்பது சற்றுமிலதாய்
மித்துருவாகநீ மேவிக்காக்க
காக்ககாக்க கண்மணியேகாக்க
நோக்கயாவு நொடிப்பதின்முன்னம்
ஆக்கியுமளித்து மழிப்பாள்வாழ்க
பாக்கியமெல்லாம் பரிப்பாள்வாழ்க
அண்டர்க்கென்று மரியாள்வாழ்க
தொண்டருளத்திற் றோய்வாள்வாழ்க

மங்கலவடிவாய் மகிழ்ந்தாள்வாழ்க
எங்குந்தானு யிருந்தாள்வாழ்க
வாழ்க வாழ்கவாலாம்பிகைவாழ்க
வாழ்ககன்னிமா சத்திவாழ்க
தேவதேவி சிவகாமிசுமங்கலை
பாவநாசி பங்கயமலூராள்
வித்தகிவிண்ணகி வேதகிநாதகி
தத்தகிமாயகி தாயகிசாயகி
காமிநேமி கௌமாரிவாமி
சாமிவிடமி தமியபிராமி
அந்தரிபுரந்தரி அகோரிதிகம்பரி
சுந்தரிநிரந்தரி துரந்தரிபயோதரி
அரகரநாரி அகோசரிசூரி
மரகதவீரிவைரி பபங்கரி
தற்பரைசயமகள் சண்டிகைசூலிகை
பற்பலபடையாள் பயிரவிபகவதி
வில்லிவிசையை வராகிநாராயணி
துல்லிமாதங்கி துர்க்கைதிரிபுரை
காமகோட்டத்தி கலையாள்வாலை
நாமகள்புவனை நங்கையுன்மனி
சிவசிவதாண்டவி சின்மயஸ்ரூபி

சிவசிவசத்தி தேவியேபோற்றி
திருவேபோற்றி தேவேபோற்றி
கருவேபோற்றி கதியேபோற்றி
அருளேபோற்றி யன்பேபோற்றி
பொருளேபோற்றி பொறையேபோற்றி
சீரேபோற்றி சிவமேபோற்றி
நேரேபோற்றி நிறைவேபோற்றி
குணமேபோற்றி குறியேபோற்றி
பணமேபோற்றி வாழ்வேபோற்றி
அறிவேபோற்றி யாதியேபோற்றி
நெறியேபோற்றி நீதியேபோற்றி
சதியேபோற்றி தாயேபோற்றி
மதியேபோற்றி மலையேபோற்றி
வெளியேபோற்றி மெய்யேபோற்றி
ஒளியேபோற்றி யுணர்வேபோற்றி
துதியேபோற்றி சுடரேபோற்றி
பதியேபோற்றி பரையேபோற்றி
போற்றிபோற்றி பொன்னடிசரணம்
போற்றிதேவர் புகழடிசரணம்
மன்றினடிக்கு மலரடிசரணம்
என்றலைவைக்கு மிணையடிசரணம்

வேதச்சிலம்பணி மெய்யடிசரணம்
சீதக்களபச் சீரடிசரணம்
இன்பங்கொடுக்கு மிறையடிசரணம்
துன்பநீக்குந் துணையடிசரணம்
காலனைச்செற்ற கழலடிசரணம்
பாலனைக்காத்த பருவடிசரணம்
மகிடனைமிதித்த மாவடிசரணம்
சுகித்திடநின்ற சிற்றடிசரணம்
மூவர்பூசிக்கு முதலடிசரணம்
யாவர்க் குந்தலை யாயடிசரணம்
உலகம்விரிக்கு முயரடிசரணம்
உலகமொடுக்கு மொளியடிசரணம்
சரணஞ்சரணஞ் சரணம்புயமலர்
சரணமெக்காலுஞ் சரணஞ்சரணம்
சத்தியின்கவசம் சத்தியாற்பெற்றுப்
பத்தியிற்கொண்டு பரவசமாகிச்
சுத்தமாய்ச்சுத்த விடத்திற்சுத்தியாய்ச்
சத்திநற்பீடச்சக் கரம்வரைந்தே
அன்புடன்பூசை யறிந்துபுரிந்தே
இன்புடன்பக்க மிருந்துமிர்ந்து
முழுமனதாகி முதல்வியையெண்ணிப்

பழுதறமூன்று பத்திரண்டொன்றாய்
மண்டலமேத்தி மகிழ்ந்து துதிக்கில்
அண்டர்கள்போற்று மாத்தாள்மகிழ்ந்து
தண்ணளித்தாயாய்த் தரிசனந்தந்
தெண்ணியவரங்க ளீவாளீவாள்
அட்டமாயோக மப்போதேசித்தி
நிட்டையுங்கூடி நிர்மலமாகும்
அந்தகாரமா யலறிநடுங்க
வந்திடுகூற்றும் வணங்கியேகிடும்
நாமகள்நாவில் நயந்துமகிழ்வள்
மாமகளெண்மர் மகிழ்ந்துநீங்கார்
நவக்கிரகங்கள் நட்பாய்வியக்கும்
கவனத்திக்குப் பாலர்கள்களிப்பர்
தேவர்முனிவர் சேர்ந்துரைசெய்வர்
தாவியகருமந் தடையறமுடியும்
அன்னையருளி லரியதுமுளதோ
பின்னுமவரவர் சத்திப்பிரிவால்
ஒருகாலிருகால் ஓதல்கவசம்
பருவிடம்பிணிபேய் பார்வைசூனியம்
எல்லாம்நீங்கி யின்பமளிக்கும்
நல்லார்நட்பை நயந்துகொடுக்கும்

கற்பார்கேட்பார் காண்பார்சொல்வார்
நற்பொருளாக நாடிப்பூசிப்பார்
எத்தகையோரு மேதநீங்கிச்
சுத்தமாயிருமைச் சுகத்தைப்பெறுவர்
சத்தியினருளால் சத்தியின்கவசம்
பத்தியபேர்க்கருள் பலித்தல்சத்தியமே.

அம்பாள் துணை.

சிவசத்திகவச முற்றிற்று.

தேவிதிருவடிவாழ்க.

௨

சிவமயம்.

சிவசத்தி அகவல்.

காப்பு.

சததியின்அகவ ல்
சுத்தமாய்த்த ர
நித்தமான தோ
ரத்தியைப்போற்றுவாம்.

கலிவிருத்தம்.

அன்பு றுஞ்சிவசத்தி யகவலை
யின்பமாக விசைந்து துதிப்பவர்
துன்பமியாவுந் தொடராப் பராபரை
தன்பதப்போது சார்வது சத்தியம்.

சிவசத்திதுதி.

சீர்திகழ்கதிரொளி தீயழன்மணிநகை
பேரெழின்மலர்மணம் பிரிவுறுவகைபோற்

சத்தியுஞ்சிவமுந் தானென்றாகியே
யெத்தொழிலுஞ்செயு மிறைவியையேத்துவாம்.

அகவல்.

சீர்மலிசூரியர் திகழ்நவமணியதா
யேருறப்பொருந்தி யியங்குபொன்முடியுங்
காரிருணெய்தற் காடெனக்கறுத்துப்
பேரியன்மணமாய்ப் பிறங்குபொற்குழலும்
வாடுதற்சேர்க்கை வண்டுகளணுகா
நாடியபேரெழி ஞ்ண்மலர்முகமு
மதியினையிரண்டாய் வகிர்ந்ததிலொன்று
துதிதரக்காணத் துலங்கிடுநெற்றியுங்
கடிகமழ்கருப்புச் சிலையெனக்காண
நெடிதுறவிளங்கு நீள்புருவங்களுஞ்
சந்திரசூரியர் தாமுதித்தொடுங்கு
மந்தமிற்பேரருளான நின்கண்களுங்
கற்பமனைத்திலுங் கடிதினீருக்கு
மற்புதவாரழ லமர்நுதல்விழியு
மெழினிறைவதனத் திரதச்சகடெனக்
குழைமின்தோடொளி குலாவியகாது

மம்புயமுகமல ராரெழில்விளங்கிச்
செம்மைக்குமிழாய்ச் செறிந்தநாசியுங்
கொவ்வைக்கனியு நாணிக்குனிந்தநற்
செவ்வைக்கொவ்வாச் சிறந்தவிதழ்களுங்
காயாமதிமுகக் கதிரமுதொழுகச்
சாயாநிலவாய்த் தங்கியமூரலு
மங்கலநாயகர் வனப்பும்புகழுஞ்
சங்கையில்வீரமுந் தான்புகழ்வாயு
மகவாசையினுன் மகிழ்ந்துமுத்தங்கொளத்
திகிரிதன்கரத்தேந் துஞ்சிபுகமுந்
தேவிநின்மணத்திற் சேர்ந்தபூச்சரத்தாற்
றூவியவளையொளி தங்கியகழுத்து
மீசனுலொருதலை யிழந்தயன்பயத்தா
னேசமாய்வாழ்த்து நெடும்பணைத்தோள்களு
நமக்கெதிராக நற்றாமரைமலர்தற்
றமக்கடாதெனநகை தங்கியகையுஞ்
சிவன்மயன்முற்றச் சீரெழில்விளங்கு
நவமணிமாலை நலங்கிளர்கொங்கையுந்
தடமுலைநடுவே சார்மயிர்ரேகை
படரொளிபோய்புகும் பருஞ்சுழியுந்தியுந் [ற்
தருகுரைவெடிப்பெனத் தாங்கொளுத்தனத்தா

பெருவளையொளிமிகப் பிறங்குறுண்ணிடையு
மிமமலைபக்க மெனவிரிந்தழியா
தமர்நிதிச்சேமவைப் பாகியநிதம்பமு
மத்தகந்துதிக்கை மருப்புவாய்பகையென
வத்தனழிக்கநே ரானபொற்குறங்கு
மாடகநவமணியணை கிண்கிணியொலி
நாடினற்குறுதிசொ னவிற்கணைக்கால்களு
மெய்ப்பொருளுண்மையு மியல்புறவறியச்
செப்பிடுமாரணச் சிரம்பதிபதங்களு
நவமணிக்கலன்களு நற்பட்டுடையும்
புவனங்கடந்தொளிர் பொலியுமென்மேனியுந்
துணைவரைப்பாகந் துலங்கவைத்தநின்
னிணையிலாக்காட்சி யெழில்வடிவத்தை
வல்லவன்கண்டு மகிழ்வதல்லான்மற்
றல்லாராலு மறிதற்பாலதோ
சத்தியேயன்றிச் சத்தனுமிலையா
லெத்தொழில்களு முனையன்றிவேறியங்குமோ
வைவர்க்கிறைவியா யைந்தொழிலளித்து
மெய்வகையுணர்வுக் குணர்வாய்விளங்கினை
யெவ்வெவர்தம்மையு மெளிதிலறிந்தே
யவ்வவர்பெறும் பேறுகிவழங்கினை

மெய்யின்மெய்யாய் மெய்யிலுகந்து
பொய்வகையாவும் போக்கிவிளக்கினை
யறியாதவர்க்கு மறிவாய்ப்புகுந்து
குறியாய்விளக்கிக் குணங்களாய்நின்றனை
நல்கூர்ந்தார்க்கு நலங்கிளர்மணியா
யெல்லையிற்செல்வ மேற்பவருளினை
யரிபிரமாதிய ரளத்தறகொண்
ணுருவருவாவடி வாகியுயர்ந்தனை
சராசரமெல்லாந் தானீன்றருளியும்
பராபரன்றேவியாய்ப் பக்கமுகந்தனை
யண்டரண்டங்களுக் கப்புறமானநீ
கண்டறியாவனுக் காட்சியுமாயினை
மண்ணீர்தீகால் வான்மதிரவியணு
யெண்ணுலகுந்திசை யீரைந்தாயினை
நிற்குணநிர்மல நிட்களமாயினை
சற்குணந்தற்பரந் தயாநிதியாயினை
யருவுருவின்றியே யனைத்துமாயினை
மருவுயிர்க்குயிராய் மன்னிநிறைந்தனை
யறிவுக்கறிவா யமர்ந்துவழங்கினை
குறிகுணமின்றியே குவிந்துவிரிந்தனை
சண்டிதமனைத்துங் கடந்துநின்றனை

மண்டியபேரரு ளாகிமகிழ்ந்தனை
நித்தமாயேக மாகிநிறைந்தனை
தத்துவாதீதத் தற்பரையாயினை
பேரானந்தப் பெருங்கடலாயினை
யாராமறையி னரும்பொருளாயினை
யெத்திறநாயக ரிசைந்துநிற்பினு
மத்திரநாயகி யாகியமர்ந்தனை
யிணையிலாத்தலைவற் கீன்றவன்னையுந்
துணைவியுமகளுமாய்த் தோன்றநின்றனை
அவளவளதுவென வாகிமுப்பொருளாய்
நவபெரும்புவன நடப்பவுவந்தனை
பதிபசுபாச மெனப்பகர்மூன்றிற்
பதியாய்ப்பசு பாசத்தியக்கினை
துரியாதீதச் சுடரொளிமுடிவி
லுரியபேறுவு வந்துவிளங்கினை
ஜின்மயஞ்சிவமயந் தினமயமெல்லாந்
தன்மயமாகத் தங்கிமுழங்கினை
பெரிதினும்பெரிய தாகிப்பிறங்கினை
யரிதினுமரிய தாகியமர்ந்தனை
வேதாகமமாய் விளங்கிவிளக்கினை
மாதாவாகி மகிழ்ந்தருள்செய்தனை

மந்திரம்பதமொடு வன்னம்புவன
முந்துதத்துவங்கலை யாறுமுழங்கினை
யோங்காரத்தி னுட்பொருளாயினை
பாங்காய்நின்ற பஞ்சாக்ஷரியாயினை
யஷ்டாக்ஷரியா யமர்ந்துபொருந்தினை
யிஷ்டமாயன்பத்தோ ரக்ஷரமாயினை
கன்மம்பத்தி ஞானமுக்காண்டமாய்ச்
சென்மநீங்கத் திரட்டியருளினை
சரியைகிரியை தகைவிலாயோக
மருவுமெய்ஞ்ஞானம் வகுத்துவழங்கினை
சாலோகாதியாய்த் தங்கிடும்பதங்களின்
மேலாம்பதப் பொருளாகிமேவினை
சமயம்பலவுந் தானெனக்காட்டி
யமையாச்சமயத் தரும்பொருளாயினை
செய்ததுஞ்செய்வதுஞ் செய்யப்போவது
மும்வகையுயிருக் குற்றகருணையே
தன்பயன்சிறிதுஞ் சாராதியற்றிய
தென்பயனாக வெளியேனுணர்கிலே
னிருளிலெண்ணு மெத்தொழிற்களையு
மிருள்வலியாலஃ தெய்தியதுணரா
மருணிறையுலக வண்மையேபோ

லருளாலியங்குவ தறியேனறிவிலன்
பாற்கடலுயிர்கள் பலசீவன்களை
யேற்புறத்தேடு மியற்கையேபோ
லருட்கடறன்னி லமிழ்ந்துமறியா
மருட்கடலாகி மருண்டுவெருண்டனன்
பொல்லாவினையேன் பொய்தனையுடையேன்
கல்லாமூடன் கள்ளன்கபடன்
செல்லாநெறியிற் சென்றிடுஞ்சிதடன்
பல்லோர்க்குதவாப் பதகன்பாவி
நல்லோர்தம்மை நகைக்குநகையன்
புல்லோர்தம்மைப் போற்றும்புலையன்
பொய்யைமெய்யாய்ப் பொருந்திக்களிப்பவன்
மெய்யைப்பொய்யாய் மேவிப்புரிபவன்
துன்பந்தன்னைத் துணையாய்க்கொண்டவ
னின்பந்தன்னை யெய்திடாய்பேதையன்
கசடன்கர்வன் கனிட்டனேழை
யசடனதர்ம னறியானகலன்
செருக்கன்சினத்தன் சிற்றினமுடையோன்
றருக்கன்பிணக்கன் றகைவில்வழக்கோன்
குலமிலனலமிலன் குணமிலன்மணமிலன்
பலவுயிர்க்கிரங்காப் பஞ்சமாபாதகன்

தீங்கானதெல்லாந் திரண்டுருவாகி
நீங்காவினையாய் நின்றநிலையினன்
பொய்தனைப்பெருக்கிப் பொழுதினைப்போக்கு
முய்வகையறியா வுலுத்தனுணர்விலன்
மனமெவ்வகையோ வவ்வகையாகி
யினமிலாவகையெலா மெய்திடுங்கடையன்
கறங்குகொள்ளிக் கட்டையாய்ச்சுழன்று
மறங்குவியாசையின் மன்னியுழன்றன
னுடுப்பதுமுண்பது மொண்ணகையாருடன்
படுப்பதுமெய்யாய்ப் பார்க்குங்கயவன்
மெய்யினீறு விளங்கச்சாத்திப்
பொய்யில்வேடம் பொலியப்புனைந்திங்
குடனெக்குருகியு ரோமஞ்சிலிர்த்துப்
படபடத்துள்ளம் பாகாய்க்கரைந்து
விழிநீர்பெருகி மெய்நனைவுற்று
மொழிதடுமாறி முகமிகமலர்ந்தே
யாடிப்பாடி யலறிப்புரண்டு
நாடியோடி நலந்தீங்காகிப்
பித்தரின்மயங்கிப் பேயரின்வெருண்டு
மத்தரின்வயங்கி மைந்தரிணைத்தே
உய்வகையதனை யுறுதியாய்க்கொண்ட

மெய்யடியார்கண் மேவிப்பொருந்து
மன்பிற்சிறிது மமராப்பேதையன்
றன்பக்குரம்பைத் தொலையாவினையினன்
கல்லினுமுருக்கினுங் கடியசிந்தையன்
சொல்லினுஞ்செயலினுஞ் சுணங்களிற்கடைய
னேழையிலேழை யிழிஞனென்றிரங்கியே
யாழாமற்செய்யரும் பெருங்காட்சியா
லெள்ளத்தனையு மிறைவிநின்னருளைக்
கொள்ளநினையாக் கொடும்பெரும்பாதக
னெல்லாத்துர்க்குண வியற்கையுமுடையேன்
பொல்லாவினையைப் போக்குவதெப்படி
வினையெலாஞ்சேர்ந்து வெகுண்டுவாட்டுதே
யன்னையதுதீர்ந்திட வருனென்பாலிலை
ஆ! ஆ!! கொடுமை யாருடன்புகல்வேன்
வேறென்செய்வேன் வினைவசம்வினைவசம்
ஐயோ! என்றுயர ளவிலையளவிலை
மெய்யாய்ச்சொன்னேன் வேறாரறிவார்
வலியார்வருத்த வருந்தும்மெலியார்
வலியாரன்றி வருந்துணையுளதோ
மெலியேற்குன்னருண் மேவாதொழியின்
வலியவினையின் மாட்சியுந்தீருமோ

விரவிமுன்னிருள்போ லெவ்வினைகளுமுன்
னருளான்மாய்வ தன்றிவேறுளதோ
வறிவுடனுயி னருளவும்வேண்டா
அறிவிலனுயி னருளியும்பயனில்லை
யிருவகைத்தன்மையு மெய்தாப்பேதையன்
கருவழிநோக்கிக் கலங்கிமலங்கின
னிருதலைக்கொள்ளியினி யங்கூர்வனவாய்ப்
பெருதலைவினையிற் பிறந்திறந்துழன்றன
னெவ்வகைவினையு மெளிதிற்றீர்த்துச்
செவ்வகையருளத் தேவிநீயலது
மெய்வகையாகவே றியம்பற்பாலதோ
வுய்வகையுன்னை யன்றிவேறுளவோ
வன்னையுமத்தனு மாகியமர்ந்தநீ
பின்னையுங்குருவாய்ப் பெருவடிவாகித்
திருவடிதீக்ஷைத் திரம்பாலித்து
மருட்சேர்வினையின் மாட்சியொழித்துத்
தத்துவங்காட்டித் தன்னையுங்காட்டி
யொத்திடமேலா முறுபொருள்காட்டிப்
பாசாபாச மனைத்துந்தொலைத்துப்
பேசாமோனப் பெற்றியுங்காட்டி
மந்திரமார்க்க வகையதுங்காட்டித்

தந்திரயுத்தி தண்ணளிகாட்டி
யசபாமந்திரத் தரும்பொருள்காட்டி
யுசபாஞான வுறுதியுங்காட்டி
யட்டமாயோகத் தரும்பொருள்காட்டி
யிட்டமாசித்தி யின்புறக்காட்டி
கருவிகளெல்லாங் கழன்றிடக்காட்டி
மருவிடுபூரண வடிவதுங்காட்டிக்
காயமும்வாக்கு மனமுங்கடந்த
நேயாநேய நிறைவையுங்காட்டி
யின்பவாழ்வி லிசையவுங்காட்டி
துன்பப்பிறப்புத் தொலைவிடங்காட்டி
கருக்சழிச்செல்லாக் கருத்தையுங்காட்டி
பெருக்கிளர்ஞானப் பெற்றியுங்காட்டி
யென்செயலெல்லா மில்லையாக்காட்டித்
தன்செயலெல்லாந் தானெனக்காட்டிப்
பிரியாப்புணராப் பேரொளிகாட்டி
யருவாயுருவா யல்லதுங்காட்டி
மறவாநினையா மவுனமுங்காட்டிப்
பிறவாவிறவாப் பெற்றியுங்காட்டிக்
கண்ணுற்காணுக் காட்சியுங்காட்டி
யுண்ணுவுணர்வுக் குணர்வையுங்காட்டி

யண்ணுவுண்ணு வமர்சுழிமுனைமேல்
விண்ணுயொளியாய் விளங்குதற்காட்டி
யலையாநிலையத் தறிவுசென்றடையு
மூலையாநாதத் தொடுக்கமுங்காட்டி
யுச்சிமேல்வீட்டி லோமெனவிளங்குஞ்
சச்சிதாநந்தத் தனிப்பொருள்காட்டிக்
கற்பதுங்கேட்பதுங் காண்பதுமறக்குந்
தற்பராநந்தச் சார்வையுங்காட்டி
யென்போதமெலா மிறப்பதுங்காட்டித்
தன்போதத்திற் றங்குதல்காட்டிச்
சென்றடையாச் சிவதெரிசனங்காட்டி
நின்றதுவும்வரா நிலைமையுங்காட்டித்
தம்மாலெம்மாற் றுனினைவில்லாச்
சும்மாவிருக்குஞ் சுகத்தையுங்காட்டி
நல்லாரோடு நயப்புறல்காட்டி
யெல்லாஞ்சிவமா யெய்திடக்காட்டிப்
பூதமாநிலைகள் புரண்டுமாறினு
மாதுநின்றுண் மறவாமையுங்காட்டிக்
கனிரசநெய்யாற் கண்டுதேன்சீனி
யினிதுறச்சேர்ந்த வின்சுவைமேலாந்
தீனமுகத்தை தெவிட்டாதருளி

யீனமிற்பதத்தி லெளியனைச்சேர்ப்பா
யில்லையேயின்னு மிசையும்பிறப்பெனிற்
றொல்லைவினையின் றுயரம்பொறுக்கே
னென்றுநீயென் றெண்ணப்படுவதோ
வன்றுநானென் றறியவிளம்பினை
யன்றுமுதலா யணைந்திருந்தனுவிற்
பொன்றுதற்புணர்தற் பேசவுங்கூடுமோ
வின்னமெத்தனைகால நானெண்ணினு
மன்னது வரை யுடம்பாக்கவல்லநீ
யெத்தனைகாலநின் கருணையில்லையோ
வத்தனைகால நானுகியேநிற்பேன்
கடும்பசிக்காமக் கனலும்பிணியுடன்
படுமுடற்றுயர்யார் பகரப்படுவதோ
வந்தக்கரண மலைத்திடுந்துயரை
யெந்தவிதத்தா லெடுத்துமொழியலாம்
புவனப்பிரட்டிற் பொருந்தித்திரியுங்
கவனப்பெருந்துயர் கருதப்படுமோ
யோகமாதரின் பொய்யிற்கலங்கிச்
சாகப்படுந்துயர் சாற்றற்பாலதோ
பூதிகரண புவனபோகங்களும்
வாதனையேயலான் மகிழ்வுசற்றுளதோ

சீ-சீ-யிதென்ன சென்மஞ்சென்மங்
கூசுதே கூசுதே கூறவுங் கூசுதே
மலமுஞ்சலமுங் கிருமியுமல்கிப்
பலகாணுற்றம் பரவியபாண்டஞ்
சீயுமுதிரமுங் கோழையுஞ்செறிந்து
நோயுங்கூடி நொடிதூன்வீயு
மந்தோ! விதனி லருவருப்பற்றது
மெந்தவிதமோ வீததிசயமதிசய
மெழுவகைப்பிறப்பினு மேற்றமாகியே
பழுதிலாப்பதத்திற் பரவச்செய்திடு
மனிதச்சாதியில் வருந்துயரிதுவா
லினிதப்பிடிற்கீ ழியம்புவதெப்படி
யெத்தனைகால மெத்தனுகொடுப்பினு
மத்தனைக்கும்பின் னனைவதுன்னடியே
யாண்டானடிமை யானவிவ்வழக்கு
மூண்டாளல்லது முடிவதுமில்லை
யுன்னடியிலாது வேறுரைவிடமுளதோ
வென்னையுமாள்வ தியார்நீயன்றியே
யெல்லாந்தெரிந்தியக் கிடுமுனக்கும்
பொல்லாவினையேன் புகல்வதும்புதுமையே
யிறத்தற்பிறத்தலா யெய்திடுந்துயர

மறக்கொடியேனு ஞற்றிலேனுற்றிலே
னுற்றிலேனுற்றிலே னம்மையேயாற்றிலேன்
கூற்றுகந்தாடுங் குமரிசர்வேஸ்வரி
யோங்காரிகுடிலையு மையவளுத்தமி
யாங்காரியம்பிகை யபிராமியீஸ்பரி
மங்கைபவானி மலைமகட்பார்ப்பதி
சங்கரிசாம்பவி சதாநந்திதற்பரை
புங்கவிவாமி புவனேஸ்பரிவீரி
துங்கவிநாரி சிவகாமிதுரந்தரி
பவுரிபயங்கரி பண்ணவிமாதவி
சவுரிவிமலி செஞ்சடாடவிசாமளை
சமரிசாமுண்டி சண்டிகைசயமக
ளமரியம்பணத்தி யபிராணியாரணி
சுபகரிகேசரி துர்க்கைமாதரி
தபகரிகோரி தாட்சாயணிநீலி
யந்தரிசுதந்தரி யகோசரிநிசாசரி
மந்தரிநிரந்தரி வைகரியகோரி
காளிமாதங்கி காத்தியாயினிசிவை
யாளிவாகனி கலையாணத்தியமா
யமலினிமாலினி யையைவிசையை
கமலினிசூலினி காமகோட்டத்தி

வாலைபுவனை திரிபுரைவராகி
பாலைக்கிழத்தி பயிரவிபகவதி
நாககங்கணத்தி நாராயணிநாயகி
மோகினிவசனி கௌமாரிமுக்கண்ணி
யிறைவியெதிர்ச்சி யீசன்றுணைவி
மறைவிமகிழ்ச்சி வல்லபைவல்லவி
யரஹரதிஹம்பரி யகிலாண்டநாயகி
திரிபுரதாண்டவி தேவிபிர்மாண்டகி
பூரணிநாரணி புரந்தரிபுராந்தகி
காரணிகௌரி கல்யாணசுந்தரி
பராபரைசத்தி பரமேஸ்பரிமாதா
தராதலச்செல்வி தையல்சாஸாட்சி
மங்கையற்கரசி வல்லிமீனாட்சி
யங்கயற்கண்ணி யன்னைகாமாட்சி
மங்கலைமனோன்மனி மயேஸ்பரிருத்திரி
பங்கயமலராட் பாரதிகுண்டலி
வேதகிவித்தகி விண்ணவர்க்கிறைவி
நாதமுடிவி னடனசிங்காரி
நிராதரிநிராகரி நிமலைநிர்வாணி
புராதனியாற்றிலே னாற்றிலேன்போற்றி
போற்றிபோற்றி பேரொளிபோற்றி

யேற்றுஞ்சீரொளி யேரொளிபோற்றி
கண்ணேமணியே கருத்தேபோற்றி
விண்ணேயொளியே விளக்கேபோற்றி
பொன்னேமணியே பொருளேபோற்றி
மன்னேமதியே மலையேபோற்றி
குலமேகுணமே குறியேபோற்றி
மலரேமணமே மதுவேபோற்றி
பெண்ணேயெழுத்தே யிசையேபோற்றி
பெண்ணேயானே பிறவேபோற்றி
யருளேபொருளே யன்பேபோற்றி
மருளேதெருளே வானேபோற்றி
யாதியேசோதியே யந்தமேபோற்றி
யோதியேமுடியா வுணர்வேபோற்றி
நீதியேநெறியே நிலையேபோற்றி
கோதிலாஞானக் குன்றேபோற்றி
யின்பக்கடலே யிறையேபோற்றி
துன்பநீக்குந் துணையேபோற்றி
தேனேபாலே தெளிவேபோற்றி
வூனேயுயிரே யுணர்வேபோற்றி
நித்தியநிர்க்குண நிராமயபோற்றி
சத்தியசற்குண தயாநிதிபோற்றி

ஜின்மயசிற்பர சிவமேபோற்றி
தன்மயதற்பர தவமேபோற்றி
சொற்பதங்கடந்த சுடரேபோற்றி
யற்புதாநந்தத் தடைவேபோற்றி
பூரணநிறைவின் பொலிவேபோற்றி
காரணமுடிவின் கதியேபோற்றி
பேசாமோனப் பெருமையேபோற்றி
யாசைப்பேற்றி னடைவேபோற்றி
போற்றிபோற்றி புண்ணியமுதல்வியே
யேற்றியேபோற்றினே னிறைவியுன்னடைக்கல
மடைக்கலமடைக்கல மம்மேயடைக்கலம்
படைத்தளித்தழிக்கும் பராபரையடைக்கலம்
மருணாம்பிகையே யறிவேயடைக்கலந்
தருணாம்பிகையே தாயேயடைக்கலங்
கருணாம்பிகையே கதியேயடைக்கலஞ்
சொர்ணாம்பிகையே சுகமேயடைக்கலம்
பத்மாம்பிகையே பதமேயடைக்கலந்
தத்வாம்பிகையே தனியேயடைக்கலம்
பவளாம்பிகையே பதியேயடைக்கலந்
தவளாம்பிகையே சதியேயடைக்கலம்
வேலாம்பிகையே விபுவேயடைக்கலம்

வாலாம்பிகையே வடிவேயடைக்கலஞ்
சிவாம்பிகையே தெளிவேயடைக்கல
நவாம்பிகையே நலமேயடைக்கலம்
புவனாம்பிகையே பொறையேயடைக்கலம்
பவனாம்பிகையே பரையேயடைக்கலம்
மீனாம்பிகையே வெளியேயடைக்கல
ஞானாம்பிகையே நயமேயடைக்கல
மடைக்கலமடைக்கல மம்பாளடைக்கலங்
கடையிற்கடையாங் கல்லாக்கயவன்
சத்திநின்னருளாற் சாற்றிடுஞ்சொற்க
ளொத்தசீர்ப்பா வஞ்சொழியிருநூற்றையு
மக்கடம்மதலைவாய் மொழியேபோன்
மிக்கநீகேட்டு வியந்தடியேன்ற
னற்பவநீங்கி யுயர்நின்பதத்துறத்
தற்பரையேயருட் சரணஞ்சரணஞ்
சரணஞ்சரணஞ் சரணம்பிராட்டி
சரணம்புயமலர் சரணஞ்சரணே.

மனோன்மணி துணை.

சிவசத்தியகவல் முற்றும்.

திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

சிவசத்திபதிகம்.

ஓமெனுங் குடிலையு நாதமுறுவிந்துவு முருவிலா நித்தியசிவனு, முருவுடை மகேசனுமுருத்திரனு மாயனு முந்தியிற்றோன்றினோனு, மாமெனுஞ் சத்தியாயவரிடந் தனிலமர்ந்து குடிகொண் டிருந்து, மங்கங்கும் வெவ்வேறுபிரிவாக நாடியுமகிலப் பிரபஞ்ச மெல்லா, மூமெனுஞ்சூனியமா யுள்ளுணர் நிராமயற்றுள்ளொளி நிறைந்துநின்று, மொன்று பலவென்று புகல கண்டுணர முடியாத வுண்மையாய் நின்று வெங்குந், தாமெனுஞ் செயலருட் சச்சிதா நந்தியே சர்வவுயிரானவுமையே, சத்குண சதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. க

மூலகுண்டலியசபைநாத வொலிமேற் சென்று முடிகியே யண்டமுட்டி, முறைமையாய்ச் சேர்ந்திடு மிடங்கொண்டு பலவித மொழிந்திடு மெழுத்துமாகி, ஞாலமிசை யகரமாயிகரமாயுகரமாய் நவிலெகர வொ

க்ரமாகி, நயமானவைந்திலே யைம்பதனோ டொன்றாகி நான்மறைப் பிரிவுமாகிச், சீலமிகுமாகமசாத்திர புராணமொடுசேர்ந்த கலைஞ்ஞானமுதலாந், தேர்ந்தவருரைத்தமொழி சொல்லவுமிலக்கிலே சிறியனேன் மயலைநீக்கி, சாலவே யசலையருட் சச்சிதாநந்தியே சர்வவுயிரானவுமையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியேசதாநித்ய ஞானமணியே. ௨

வட்டமா யொருகோண மிருகோண முக்கோணம் வளர்நான்கு மைங்கோணமும், வாகான சட்கோண மெழுகோண மெண்கோணம் வாழுநவ கோணமுடனே, திட்டமாய் நாரபத்து முக்கோண முதலான திகழ்சக்ர வடிவமைத்துச், சேர்ந்தவொரு மந்திர முணர்வாய்த் துதிப்போர்கள் சிந்தையிலுகந்து நின்று, ளெட்டவே யருளுவது கண்டுமே பாவியேனிவ்வகையி னென்று பற்றி, யேற்றாத மடமையைக் காத்தருளல் வேண்டுமே யேழையேன் மிகவுநொந்தேன், சட்டமா யருட்டருஞ் சச்சிதாநந்தியே சர்வவுயிரான வுமையே, சத்குண சதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ௩

இயமநிய மாசனந் தனையுணர்ந் தெண்ணிமிக வெங்குமலை மனதைநாடி, ஏகாதவண்ணமே வாகாய்

நிறுத்தித் தன்னிஷ்டதெய் வத்தையேத்தி,நயமாகதச வாய்வை யொருமித்துப்பின்கலையி னணுகவுமிடது கலையுநலமுற்றசுழிபற்றிக் குணமுற்றமூலமுத ளுடும் வழிவீடுதோறுந், தயவுற்ற தெய்வத்தைப்பயமுற்றுத் தரிசித்துத் தாண்டிமே லின்பவீட்டில்,சதாபோதமா கின்ற மதியமுதமுண்டபேர் சார்ந்திடத் திருப்பதத் தில், ஜயவொலிமுழங்கிடுஞ் சச்சிதாநந்தியே சர்வவுயி ரானவுமையே, சத்குண சதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ச

பாராதிமுதலான வைம்பூதவகையிற் பரந்தவை யைந்துவிதமும், பண்பானதசவாயு தசநாடி முக்கு ணம் பகருமேடனை மூன்றுடன், நேராதவாக்காதி வழிதானவைந்துடன் நிகழ்விந்து வாக்குநான்குஞ், சேர்ந்திடும் புறக்கருவி யறுபதாயுட்கருவி செல்லு மாத்மம்வித்தியா, நேராதசிவதத் துவமொடுகூடி மூ ன்றிலுநின்றிடுங் கருவிமுறைமை, நிகழூறுநாலாறு மேழுமே யைந்துமாய் நிறைதத்துவங்க ளியாவுஞ், சாராதவருள்புரி சச்சிதாநந்தியே சர்வவுயிரான வு மையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ரு

இப்பிறவிதன்னிலே யிருவினைத்துடரிஞ லியா ன்படுங் துயரமதனை, யெண்ணவுந்திடமில்லை யியம்பவு நாவிலே யேழையே னிதன்னையெண்ணி, யொப்புற வமைத்திட்ட வெழுவகைப்பிறவியினு முயர்நான்கு தோற்றத்தினு, மொழிவிலாவெண்பத்து நான்குநூ ற்றுயிரம் யோனிவகை பேதத்தினுங், குப்புறவிழுந் தெழுந்தே பிறந்துழலும்வகைக் கொடியே னினைக்க லுற்று', கூறுதுவாய்விட்டு மாறுது துன்புறுங் கொ லைஞனேன் றுயரநீங்க, தப்புறவிலாதருட் சச்சிதா நந்தியே சர்வவுயிரான வுமையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ௮

பொய்யனேன் புலையனேன் கொலையனேன் களவனேன் பொல்லாத வெங்கோபனேன், பொறியிலே னறிவிலேன் குணமிலேன் மணமிலேன் பொய்யான பொய்யையெல்லா, மெய்யாயுகந்த மயன்மீளாதபாவி யேன்வேட்கைமிக வெண்ணியெண்ணி, வீணுயழிந் திடுமுழுமூட வினையனேன் மிக்கவேதாந்தஞானந் துய்யநெறியோர் சொலக் கேட்குமோ வென்செவி தொடருமோ வுணர்வுபற்றித், தோன்றுத வகைமுன ஞ் சொல்லினேனுதலாற் சோதிநீயறியாததோ, ஹைய

ன்மயனீக்கியருட் சச்சிதாநந்தியே சர்வவுயிரான வு மையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. எ

நித்தியாநந்தஸ்வரூபமாய் நிட்களநிரஞ்சன நிரா மயமுமாய், நிர்க்குணநிராலம்ப நின்மலநிராதரா நிஸ் ரூப நிச்சலமதாய், நித்தியநிர்ச்சலாநந்த நிஷ்காம நிர்ச்சங்க நிர்விஷய நிர்நாமமாய், நிஷ்கிரிய நிராதரா நிர்ச்சீவ நிர்ப்பின்ன நிருபநிரு பத்ரவமதாய், நித்திய விபுவாநந்த நிர்ச்சத்த நிர்ப்போத நிர்வசன நிர்நினைவு மாய், நிரந்தரநிர்வேதிய நிர்வயவநிர்வாண நிஷ்ப்பிர பஞ்ச நிர்விகற்பமாயுஞ், சத்தியகுணஸ்ரூபியே சச்சி தாநந்தியே சர்வவுயிரான வுமையே, சத்குணசதாநந் த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. அ

கச்சணியுமாதர்மய லச்சமறநீக்கியே கருவிகர ணாதி யெல்லாங், கட்டியொரு மூட்டையாய்ச் சுட்டு நீறாக்கிக் கலங்காத சுத்தஞான, நிச்சயமதாயருளி நச்சுமொருபேரின்ப நிறைபூர்ண வாரிதன்னி, னேச மாய்ப்படியவும் வாசமாயுற்றபி னிகழுறுமின்பமத னை, நச்சாமனச்சியு நாடாமனுடியு நானுநீயென்ற வுணர்வு, நாடிடுமெப்பிலே யுப்புறவுதன்மை போன

யேனை யாண்டுகொள்வாய், சச்சிதாநந்தசுக சச்சிதாநந்தியே சர்வவுயிரான வுமையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ௯

உண்மையறிவானந்த வுருவானசோதி யுனையுற்ற துணையாகநாடி, யுறுதியாய்ப்பேரன்பு பூண்டுநோற்பானென் றுலகில்சில பேர்நினைக்க, திண்மையாய்க்ஷணமளவு முண்மையாயன்புடைமை சிந்தையினிறைந்து நிலையாச், சேதிநானீயுமே யறிவதல்லால்வேறு தேசத்தோ ரறிவதுண்டோ, வண்மையில்வகையெனை யின்னநீவிட்டிடில்வையத்தரென்னசொல்வார் மையலாம்பாவிதானெவ்வகையினுய்குவேன்வண்மையையறிந்து நீயே, தன்மையாய்ப்பேரருட் டந்தருளவேண்டுமே சர்வவுயிரான வுமையே, சத்குணசதாநந்த சங்கரஸ்ரூபியே சதாநித்ய ஞானமணியே. ௰

சிவமயம்.

சிவசத்திநவகம்.

திங்கள் கங்கை திகழ்தர வம்புனை
மங்கை பாகன் மகிழ்ந்தளித் திட்டநற்
றுங்க யானைமுகத் தன்றன் றூயதாள்
மங்கலந்தர வாழ்த்தி வணங்குவாம்.

ஓங்கார குண்டலியாய்க் கணேசனாகி யொளிமிகுந்த சரஸ்வதியாய்ப் பிரமாவாகிப், பாங்கான லட்சுமியாய் மாலுமாகிப்பரந்தவுமா தேவியுருத் திரனுமாகி, நீங்காத மகேஸ்பரியாய் மகேசனாகி நிறைந்தமனோன்மனியும்சதா சிவனுமாகித்,தாங்காத விந்துவாய் நாதமாகிச் சத்திசிவமொன்றாகி நின்றதாயே. க

ஒன்றான பொருளாகிச் சோதியாகி யொளியாகி யொளிநிறைந்த வெளியுமாகி, மன்னாகி மன்றினிறை கோலமாகி மங்கலமா யின்பசுக வடிவுமாகி, நன்றாகி

நடுவாகி நடனமாகி நாற்பதமு முடிந்தவிடந் தானே யாகிப், பண்டாகியின்றாகி யென்றுமாகிப் பரவிவளர் பொருளாகிப் பரந்ததாயே. உ

பரந்தபரா பரையாகி யுலகமெல்லாம் படைத்த ளித் தழிக்குமுதற் பான்மையாகி, விரிந்தமுதற் பொருளுக்கும் வெளியுமாகி வெளியினின்று மொடு க்குதற்கு மொடுக்கமாகி, நிரந்தரமாய் நின்றெவைக்கு நிலயமாகி நிலாக்கதிரோன் பூமானும் வானுமாகிச், சரந்தவுலாத் தீயாகி நீருமாகித் தரணிமுத லெண் டிசையாய் நின்றதாயே. ங

நின்றநிலை நித்தியமாய் நிஷ்களமுமாகி நிராமய மாய் நிர்க்குணமாய் நிறைவுமாகி, சென்றணுகவணுக சுகச்சோதியாகிச்சிந்தைமுதற்கருவிகளுக்கரியதாகிக், கன்றாகி யுருகினர்க்குச் சேதாவாகிக்கரும் பாகிப்பா காகிக் கட்டியாகி, யின்றாகிநின்ற சுகங்காணக் காண வின்பநிறைவாரிதியா யிருந்ததாயே. ச

இருந்த சுகப் பேரருளா முண்மையாகி யிங்கு மங்கு மெங்குமொன்றாய் நிறைந்ததாகி, யருந்தின க்குச்சீனிகட்டிப்பால்தேனுகியப்பாலுந்தெவிட்டாத வமுதமாகிப், பொருந்துவிடயங்களெல்லாமதுவேய

கிப் போதரவாய்முடிந்த பொருள்தானேயாகி, வரு ந்துமுயிர் வருத்தங்கள் தனிப்பதாகி வான்பொருட் கும்வான்பொருளாய் வளர்ந்ததாயே. ரு

வளர்ந்த மகிழ் மலராகி மணமுமாகி மதுவாகி மதுவுண்ணும் வண்டுமாகித், தளர்ந்தவிடந் தன்னி லொரு தாங்கலாகித் தளராதுநின்ற நிலைதானுமாகி யுளந்தவிர்ந்து நின்றவர்தமுளமேயாகி யுண்மைதனக் குண்மையதா யுகந்து நின்ற, களந்தவிர்ந்த பொரு ளாகிப் போகமாகிக் கண்காணுக்காக்ஷியதாய்க் கரு துந்தாயே. சா

கருதுகின்ற கண்ணுகிக் கருத்துமாகிக் கருத்தி னிறைகதிரொளியுந்தானேயாகி, பொருதுபொருளெ வைக்குமுதற்போதமாகிப் புனிதமாய்ப்போக்குவரவ ற்றதாகித், துரிய துரியா தீதங் கடந்ததாகிச் சொல் லிறந்துமனமிறந்து தூரிசற்றோங்குந், தெரிவரியபரம் பொருட்குப் பரையுமாகிச் செல்கதிக்குச் செல்கதியா ய் விளங்குந்தாயே. எ

விளங்குமறையாகமத்தின்முடிவி னிறைவேதா ந்த சித்தாந்தத்துண்மையாகி, யுளங்குவியாச்சமயநெ றிக்கரியதாகி யொன் றிரண்டுமெண்ணுதவுச்சிமீதிற்,

னுளங்குகின்ற பொருளாகிச்சோதியாகிச் சோதிநெடுச்சுடராகிச் சுடரினின்ற, களங்கமிலா வொளியாகி யொளியினுண்மை காரணத்திற் பூரணமாய்ப் பதியுந் தாயே. அ

பதியாகிப் பசுவாகிப் பாசமாகிப் பசுபாசந்தனை விளக்கும் பான்மையாகி, விதியாகிமதியாகி விளங்கி நின்ற வித்தகமாய் நிறைந்தமறையாகமத்தின், றுதியாகித்துதித்திநற்பொருளுமாகித் தொல்லையாம்பழவினையைத் தொலைத்தற்கேற்ற, கதியாகிக்கதிக்கருளுங்காட்சியாகிக் கலங்கரதுகாணுமுடி வற்றதாயே. கூ

மூடியாகிமடியாகிநடுவுமாகி முன்னுமாய்ப் பின்னுமாய்முழுதுமாகி, யடியாகியடியேறும் வழியுமாகி யடிகடந்து நின்றபதந்தானேயாகி, மடியாகியுறங்கினர்க்குமயக்கமாகி மால்வெகுளி யாசையற்றோர்க் கொளியுமாகிக், கெடியாகிக் கேவலமாய்க் கிளர்ச்சியாகிக் கிட்டாதவெட்ட வெளியானதாயே. ய

வெளியாகி வெளியில் வெறுவெளியாய் நின்று விளங்குவெகு கோடி கதிரானசோதி, யொளியாகி யொளியி லொளிக்காந்தியாகியுதித்தொடுங்காத வொருபானுவாகிக், களியாகிக் களிக்கின்ற கருத்துமாகிக்

கண்காணு நின்ற நிலைக் கண்ணுமாகி, யளியாகி மது வுண்ணும் மலருமாகி யானந்தபோதமய மானதாயே.

மயமானதெவைக்கு முதன்மயமுமாகி வடித்து வடித்தெடுப்பதெல்லா மற்றதாகி, ஜயமாகிஜயங்கொடுக்குந்தன்மையாகிச் சத்துச்சித்தாநந்தந்தானேயாகி, நயமாகிநயங்கொடுக்கு நன்மையாகி நானெனதென்ற கந்தீர்க்கு நலத்தார்க்குற்ற, பயமானதத்தனையுந்தீர்ப்பதாகிப் பகலிரவுநடுவுமொன் ருனதாயே. ௧௨

ஒன்ருனசிவமாகிப் பரமுமாகி யோங்கார முடிந்தவிடத்துற்றஞானக், குன்ருகிகுன்றிலுறுங் கோயிலாகிக்கோயினடுகோடிகதிர்ப் பிரமையான, மன்ருகி மன்றினவ கோடிபானு மணியாகும் பீடமாய்ப் பீடத்தின்மேல், நின்ருடுந் திருக்கூத்தின் றிருக்கோலத்தை நின்றருள நினைந்திரண்டானதாயே. ௧௩

இரண்டாகுஞ் சத்தி சிவமிந்துபானு மிருகண்ணும் விந்துநாதங்களாகித், திரண்டவினையாகிவினைப் பயனுமாகித் தீராத தூலசூக்குமமுமாகி, வரண்டவின் ருளொளியாகி யாண்பெண்ணுகி மயங்கு மஞ்ஞான மொடு ஞானமாகி, யுருண்டெழுந்த வகாரவுகாரங்களாகியுற்ற பொருளிரண்டின் மூன்ருனதாயே. ௧௪

மூன்றுருமூர்த்தி மூக்கண்களாகி மூச்சத்திமுச்சுடரு மூக்குணமுமாகி, ஆன்ற மும்மலமு மூவுலகுமாகியவனுகியவளாகியதுவுமாகித், தோன்றகாலங்களொருமூன்றுமாகித் தூலமாய்வாக்கு மனக்கரணமாகியின்றகுருலிங்க சங்கமங்களாகி யிசைந்தபொருண்மூன்றினுலான தாயே. கரு

நாலாகும்பதவியுநான்மறையுமாகிநலமானதிக்குபுருஷார்த்தமாகி, மாலாகும் யோனிகளுங் கோணமாகி வாக்கர்தக்கரணமொடு சாதியாகி, நூலாகுஞ்சரிதை வழிமார்க்கமாகி நுண்மையாஞ் சைவத்தின் தீக்ஷையாகிப், பாலானததிலுறைந்தநெய்யுமாகிப் பரந்தநாற் பொருளிலேந்தான தாயே. கசு

ஐந்தானகடவுளருஞ் சத்தியாகி யாதிசிவன்முகமாகிக்கலையுமாகி, னைந்திடாவக்ஷரங்கடானுமாகி நலமான பூதபுலன்பொறிக ளாகிக், கைந்திடாமலமாகியவஸ்தையாகிக்கருதரியசுத்ததத்துவங்களாகி, மைந்திடுவேள் கணையாகிபால்களாகி வயங்குபொருளைந்தினிலானதாயே, கள

ஆறுகுங்குமரவேள் முகங்களாகியாதார மக்ஷரங்க டெய்வமாகிப், பேறுகுஞ்சாஸ்திரங்களளவையா

கிப்பிறங்கிநேற்குணங்கள்சமயமாகிக், கூறுதுஞ்சுவை யாகிக்குற்றமாகிக் குன்றாகிக்குன்றாதமுனிவர்நாளும், மாறாததொழின் மன்னர்தொழிலுமாகி மயக்கமிலா தாறிலேழான தாயே. ௧௮

ஏழாகுஞானம் வளர்பூமியாகியிசையாகியிசைக் குற்ற வெழுத்துமாகி, ஆழாழிபாய்த் தீவாய் முகிலு மாகியாமுலக மேலுலகந்தாதுவாகித், தாழாதவித்தி யாதத்துவங்களாகித்தனிவாரமந்திரநன்னதிகளாகிச், சூழாகும்பிறப்பாகி நகரமாகிச் சொல்லிடு மேழானதி லெட்டான தாயே. ௧௯

எட்டான குணமூர்த்திசத்தியாகி யியங்குமாசித் திமாயோகமாகிச், சுட்டானதிக்குமலைகளினுமாகிசுரர் நாகர் வசுக்கள்பலிபீடமாகி, வட்டானகோண மக்ஷ ரமுமாகிவளர் கணங்கள்கருமமு நன்மலருமாகி, மட் டானபரிக்ஷை நற்போகமாகி வருமெட்டி லொன்ப துவு மானதாயே. ௨௰

ஒன்பதென வடிவாகிச் சத்தியாகி யுதித்தகணங் கிரகமொடு சித்தராகி, யின்பநிறைகோண மக்ஷரமு மாகி யியலானகண்ட மணிலோகமாகி, யன்புநிறைநட னதாளங்களாகி யசையாத புண்ணியமு மிரசமாகித்

துன்பமிலாத் தாரணையும்வாயிலாகிச்சொலிக்கு மொ
ன்பதுவில் பத்தானதாயே. உக

பத்தானதிசையாகித் தீக்ஷையாகிப் பகருகின்ற
சிவபுராணங்களாகி, வத்தாதவரியினவதாரமாகிவழங்
குகின்றவாயுவாய்நாடியாகி, முத்தானவேளாளர்தொ
ழிலும்ாகி முதிர்ந்தவங்கம்மறைந்து காண் கோளு
மாகிக், கொத்தானதுவர் பிள்ளைக் கவியுமாகிக் குவி
ந்தசிற்பக் குறிப்பாகி நின்றதாயே. உஉ

குறிப்பான் குறிப்பதிலே குறிப்பாய்த் தோன்
றும் கொற்றவளேநற்றவளே கோதில் ஞானச், சிறப்
பான வேதத்தின் பொருளானளே சிற்பரையே தற்ப
ரையே தெய்வக்குன்றே, வுறுப்பான வுறுப்பெல்லா
முகந்துநின்ற வுத்தமியே யுள்ளுணர்வோர்க் குகந்த
நல்ல, திறப்பானதிறப்பாகித்திறப்பின்மேலுஞ் சேர்ந்
தொடுங்கச் சின்மயமாய் நின்றதாயே. உங

சிவமயம்.

உய்கைப்பதிகம்.

நாக்குமேனடு - மூக்குமூலைவழி
தாக்கிநோக்கிடம் - போக்குநிறகுமே. க

ஐயமின்றியே - மையநேர்முனை
யையும்வழிதனிற் - பையநின்றிடே. உ

வந்துபோக்கறச் - சிந்தைதாக்குற
வெந்தைநோக்கிடப் - பந்தம்வீழ்க்குமே. ௩

ஐந்துவாசலு - மூந்தமூடியே
சொந்தநாதனை - வந்துகூடிடே. ௪

அறிவைநீக்கியே - யறியாமையோக்கியே
பறிவையருளினு - லறிந்துகூடிடே. ௫

இருமைநீக்கியே - யொருமையாக்கியே
யருமையாகவே - யுருவைபூண்டிடே. ௬

பழகிவந்ததை - நழுகமுழுதையு
பழுதுவேண்டிட - வொழுகுமின்பமே ௭

தலைவன்றன்பணி - நிலையதாகவே
யுலைவிலாதுறத் - தொலையும்வினையதே. ௮

பத்தர்தம்மொடு - மொத்துவாழ்ந்திடச்
சித்தமாசறு - முத்திகூடுமே. ௯

ஆளுஞ்சற்குரு - தாளைநெஞ்சினி
ளாளும்வைத்திட - மூளும்வினைகெடும். ௰

—(-)—

சிவமயம்.

நற்போதவிழப்பு.

சித்துமசித்துஞ் செறிந்துறையுஞ்செகத்திலாண் பெண்ணதுவாகி, யொத்துமொவ்வாச் செயலாகவுண் டாயிருந்து மொடுங்குதலாற், செத்தும்பிறக்காச் சிவ சத்திசெயலா மென்று தேர்வாயே, முற்று மயங்கி யெனைநலிய முழுதும்விழியுமட நெஞ்சே. க

உண்டாமுலகந்தனி லுயிர்களொத்துமுயர்ந்து ந்தாழ்குவதாற், பண்டாயிவற்றின் பயன்யாவும் பகு த்தே வழங்கிப்பயனளிக்கக், கண்டார்காணச்சிவசத் திக் கரைக்காமென்றே காண்பாயே, விண்டும்விண்டு மெனை நலியவிரிய மேவுமடநெஞ்சே. உ

செறிவா முயிர்கள் மிகநினைந்துஞ் சேராக்கன் மச்செயலியாவு, நெறியாச் சேர்ந்துஞ் சேராதே நிறு த்தி நீதிநிலையாகக், குறியாக் குறியாச் சிவசத்தி கூட் டுஞ்செயலாய்க்குறிப்பாயே, வறியாக்குணமா யெனை நலியவகலவிரியு மடநெஞ்சே. ௩

நன்மைதீமைநன்றாக நாடவவற்றின் குணப்பய
ன்க, ளின்மையுடைமை சுகதுக்கத் தீடாயுலகி லிசை
விகரப், பன்மைப்பொருளாஞ் சிவசத்திப் பரிசாமெ
ன்று பணிவாயே, தன்மைதெரியாதெனை நலியத்தா
னே விரியுமடநெஞ்சே. ௬

நயமாய்ப் புவியிலிருவினையு நணுகவொளியுமிரு
ளுமதாய்ச், சயமாய்நலத்தார்க்கொளி யுலகாய்த்தவி
ருமல்லார்க் கிருளுலகாய், வயமாய்முறையாய்ச் சிவ
சத்தி மாறாவினைக்கு மருந்தாமே, பயமா யென்னை
மிகநலியப் பாழாய்விரியு மடநெஞ்சே. ௫

வெளிகால் தீநீர்மண்ணாக விளங்குமைந்து பூத
ங்க, ளொலியா லுயர்ந்துந் தாழாதே யொன்றி லொ
ன்று முயர்வாக, வளியால்விளங்கச் சிவசத்தி தன்னு
லாக்கவறிவாயே, நெளிவாய்மிகவுமெனைநலிய நித்தம்
விரியுமட நெஞ்சே. ௬

தண்ணார்கடலுங் கரையின்றித் தங்கிநிற்குந்தன்
மையதும், விண்ணார்நெடுமீன் தாரகைகள்வெகுவாய்
நிலையாய் நிற்பதுவு, மொண்ணுரொளியாஞ் சிவசத்தி
யுயர் வாநிலையென் றுணர்வாயே, திண்ணார் செயலா
யெனைநலியத் தினமும் விரியுமடநெஞ்சே. ௭

கல்லுட்டேரை யுயிர்ப்பதுவுங் கருப்பை யுயிர்கள் வளர்வதுவும், அல்லும்பகலுமாறும லளவாய்க் காலநிற்பதுவும், எல்லேயரையாச் சிவசத்தி யியற்று தியற்ற லறிவாயே, வல்லசெயலா யெனை நலியவலிய விரியுமட நெஞ்சே. அ

பழத்திலினிப்பும் பலவிதமும் பாலுந் தேனுங் கற்கண்டும், விழத்திற்குணங்கள்பலவாகமேவிநடக்க விவை யெல்லாம் விழிக்கும் பகலோனென விளங்க விளக்குஞ் சிவசத்தியதாமே, பழித்துமிகவுமெனைநலியப் பார்த்தேவிரியு மடநெஞ்சே. கூ

வித்தின்மரங்க ளடங்குவதுமரத்தில்வித்துவிளைவதுவு, மொத்துமொவ்வா வண்டங்க ளொன்றேடொன்றாய் நிற்பதுவுஞ், சத்துஞ்சலியாச் சிவசத்திதன்னாலான தறிவாயே, செத்தும்பிறக்க வெனை நலியத்தினமும் விரியுமடநெஞ்சே. ம

மனோன்மணி துணை.

தற்போதவிழப்பு - முற்றும்.

திருவடி வாழ்க.

உ

சிவமயம்.

திருவருள்வியப்பு.

மின்னார்நகையார் கண்ணேக்கின் வேட்கைவலை யிலகப்பட்டும், பன்னாளுழன்று தடுமாறிப்பாழா நரகிற்புகுவேனே, யென்னுதரவா யென்னுள்ளா யிருந்து காட்சிபலகாட்டும், பொன்னார்மேனிசிவசத்திப்போதாமலர்த்தாண் மறவேனே. க

மயிலின்சாயன் மென்மொழியார் மயக்கவலையி லகப்பட்டுத், தயிரிற்சுழலுமத்தாகித் தாழ்வா நரகிற் புகுவேனே, பயிலுநெறியைம் பாழ்படுத்திப் பயிலா நெறியிற் பயின்றேறித், துயிலவருளுஞ் சிவசத்தித் துணைத்தாளென்று மறவேனே. உ

மலையாந் தனத்தான் மயக்குவிக்குமாதர் வலையி லகப்பட்டே, யலைவாய்த்துரும்பாய்நிலையின்றியளரா நரகம்புகுவேனை, நிலையாய்நிறத்துநீங்காதநேசாநேச நிறைவதனைத், தலையா யருளுஞ் சிவசத்திச் சரணம் புயத்தை மறவேனே. ௩

சூதிகொண் டிருக்கும் வஞ்சனைக் கொடியார் வலையிலகப்பட்டுப், பொதிகொண்டுழலுங்கர்த்தபமாய்ப் புழுங்கிநரகிற்புகுவேனைச், சதிகொண்டருளுந்தாயாகித்தானே யறிந்து தடுத்தாண்டு, பதியாய் விளங்குஞ் சிவசத்திப்பாதப் போதைமறவேனே. ச

பற்றும் படைவேற் கண்மடவார் பார்வைவலையிலகப்பட்டே, யற்றகுளத்தின்மீன்போலவயன்றுநரகிற் புகுவேனைச், சற்றுமாறாக்கருணை வளர்தாயாயென்னைப் பரிந்தாண்டு, முற்றும்விளங்குஞ்சிவசத்திமூண்டகத்தாண் மறவேனே. ரு

பாலின் மொழியார் பொய்மயக்கின் பார்வை வலையி லகப்பட்டுக், காலிற்றரும்பாய் மிக வுழன்று கலங்கி நரகிற்புகுவேனைச், சாலக்கருணைத் தாயாகித்தானே யென்னைத்தடுத்தாளு, மாலமூண்ட சிவசத்தியருட்டாட் கமலமறவேனே. சா

குயிலின்மொழியாள் வலியமனக்கொடியவலையிலகப்பட்டு வெயிலிற் புழுப்போற்றுடித் துழன்று மீளாநரகம் புகுவேனைச், சயிலக்குறியாய் மிகக் காட்டித் தளராவன்பு பெருகநிதம், பயிலவருளுஞ் சிவசத்திப் பாதகமலமறவேனே. எ

நயத்தா லினியமட மாதர் நயனவலையி லகப்பட்டுச், சயத்தில்விழ்ந்த வீப்போலுந் தளர்ந்தே நரகிற் புகுவேனைப், பயத்தைநீக்கிப்பக்குவமாய்ப்பரிந்தேயென்னைத்தடுத்தாளு, மயத்தாலுயர்ந்த சிவசத்திப்பாத கமல மறவேனே. அ

மதியார்வதனக் கடைநோக்கின் மயக்க வலையிலகப்பட்டுப், பதிவிட்டுழலும் பூவையர் போறபாழா நரகிற்புகுவேனை, விதிகெட்டருளான் மதியாகி மெய்யைமெய்யாய் மேவமிகத் துதிகொண் டருளுஞ் சிவசத்தி தூயகழலுன் மறவேனே. கூ

சிலையார் புருவச்சேழையின் சிந்தைமயக்கி லகப்பட்டே, யுலைவாய்மெழுகாயுள்ளுடைந்தொழியாநரகிற்புகுவேனை, மலையாவுண்மைதனைக்காட்டி மறித்து மறித்துத் தடுத்தாளுங் கலையானிறையுஞ் சிவசத்திக் கழற்போதினை நான்மறவேனே. ய

அம்பாள் துணை.

திருவருள்வியப்பு - முற்றும்.

திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

சிவசத்தியலங்காரவுண்மை.

காப்பு.

வானுயர்கங்கையுந் திங்களுஞ்சூடியவார் சடையான்
றேனமர்பூங்குழன் மாதுமையாளுடன் சேர்ந்தளித்த
யானையின்போதினைச் சேவடி வாழ்த்தியவனருளா
லீனமிறசொறகொண்டருட் சிவசத்தியையேத்துவனே

நூல்.

சிவசத்தி பொன்மணியின் னொளிபோற் சிவத்தோடுறைவே
சிவசத்தியைந்து தொழிலையுஞ்சீர்பெறவே வளிக்குஞ்
சிவசத்தியொன்றாய்ப் பலவாயருவுருவாய்த் திகழுஞ்
சிவசத்தியின்றன்மையென்றுந் துலங்குந்திருவருளே.

அருளானமெய்ப்பொருளாதி பராபரையம்பிகைதன்
னருளானமெய்ப்பர போகத்தட ருமருந்தவர்க
ளருளானமெய்ப்பரபோகம் புசிக்கவநாதிமுத
லருளானமெய்வடி வாக்குஞ் சிவசத்தியாமருளே. உ

அருளாஞ் சிவசத்தி யல்லாதெத்தேவர்க்கு மாத
ரவாம், பொருளாவதில்லை முத்தேவர்பூசித்துத் தொ
ழில்விளங்க, மருளாமலகன்ம மாயைமலியவொடுங்கி
வெகு, விருளா யொளியாய் வெளியாயியக்கு மெளி
தல்லவே. ௩

அல்லற்படும் பிரபஞ்சமெனுஞ்சேறதில்முழுகார்
சொல்லிற் கடங்கா சுகக்கடலாய்த் துறந்தா ருளத்
திற், புல்லிப்பொலியு நற்பூரணானந்தப் பெருவடிவா,
யெல்லையிலின்ப நிறைவாஞ் சிவசத்தி யேந்திழையே.

ஏந்திழைச்செல்வியிறைவி சிவசத்தியீஸ்வரர்க்குத்
தாந்துணைநாயகிதையல் பராபரைசார்ந்தவரைக்
காந்துமலங்கள் கடுகநீறாக்கிக் கதியளிக்குஞ்
சாந்தணிமேனி தயாபரியாகியசங்கரியே. ௫

சங்கரிசாம்பவிதற்பரை சிற்பரைதன்னருளாற்
பொங்கிநிறைந்த பெருஞ்சலதிக்கட் புகுந்தவர்க்குத்
தங்குமலங்களெலா மொளியாகிமெய்ச்சார்வளிக்கு
மெங்குநிறையுஞ் சிவசத்தியாளடியேத்துநீரே. ௬

ஏத்தார் சிவசத்தி யிணையடிப்போதை யெப்பொழு
துஞ், சாத்தார்மலர் கொண்டடியா ருடனிதஞ் சார
வெண்ணார், பார்த்தால் விதிர்த்துப் பயந்து நடுங்கிப்

பரதவிக்க, மாற்றான் வரும்போதென் சொல்குவாரிவர் மதிமயக்கே. எ

மதிமயக்காகி மதியினைப் போக்கி வாழ்நாளொழித்து
விதியரியாது விரிவிற்புலம்பி வீண்வாது செய்து
துதிநடுவாகச் சுழியிற்றுலங்குஞ் சிவசத்தியின்
பதியறியாதவர்க்குண்டோ பரானந்த பாற்சுவையே.

சுவையாஞ் சுழிமுனைச் சிங்காரநாதச் சுடர்வெளியின், சவையாநிறைந்திருந்தா ஞனபோதமேதங்கிநின்று, நவையாநலமாய் நடிக்குஞ் சிவசத்திநற்சிலம்பின், றுவையாநிலையிற் றொடருந்தொடர் பெவர்காணுவதே. சு

காணும்பொறியுங்கருத்துமொன்றாகக்கருதினர்க்குத்
தோணுமனற் கதிரம்புலியொன்றாய்த் துலங்கிடவே
பேணும்படி சிவசத்தியின் பாதம் பிரிதலின்றி
மாணும்பெருஞ்சுகவாருதி மூழ்கியும்வாழ்குவரே. ()
வாழ்குவர்வாசியை மைய்த்திலூன்றிமதிரவியை
யாழ்குவதாக வனலிற்புகுந்தொளியாகியப்பாற்
பாழ்குணவீட்டின் பரவெளிகண்டுபதியுமுணர்
சூழ்குணஞ்சேருஞ்சிவ சத்திபாதச்சுடரொளியே. கக

சுடரொளிச் சோதிசுயம் பிரகாசந்தூண்டாவிள க்குப், படரொளியெங்கும் பரிபூரணனைந்தப்பான்மை யதா, யடரொளி யண்டாண்டங்களும் விரிந்தடங்கி யொன்றாய்த், தொடரொளி யெங்குஞ் சிவசத்தி யா கியது வொளியே. ௬உ

ஒளியே யொளியினொளிக் கழகாய் நின்றவுள் ளொளியின், வெளியே வெளியின் விளைவே விளை ந்த விள்ளாதசுகக், களியே களிக்குங்கருத்தே கருத் திற்கருதநின்ற, வளியேசிவசத்தி யானந்தமாகிய வற் புதமே. ௬௩

அற்புதமான வறிவாயமர்ந் தறியாதுநின்றே
வுற்பவமாகுமுணர்வாயுணர்வுக்கு முள்ளுணர்வாய்ப்
பற்பலசொல்லும் பொருளுங்கடந்தபரவெளியி
னற்பொருளாகுஞ் சிவசத்தியாகியநாயகமே. ௬௪

நாயகமான நடனசிங்கார நடுமுனைமேற்
றாயகமாகித்தனியே விளங்கித்தனித்தசுக
மாயகமானதறக் கெடுத்தார்க்குவலியவருந்
தூயகமானசிவசத்தியா மருட்சூழ்ந்துநின்றே. ௬௫

சூழ்ந்துநின்றார் சிவசத்தியின் பாதஞ் சுகமுறைவே
வாழ்ந்துநின்று ரிடமாயை மயங்கி வலிகுலைந்து

தாழ்ந்து நின்றேயொளிதன்னின் விளங்கியசந்திரனுங்
காழ்ந்துநின்ருர்மலங்காணுளிநீங்குங்கதிரொளியே.

கதிர்மதி யொன்ருய்க் கலக்குஞ் சுழியின் கதிர்
முனைமேல், விதிர் விதிர்த்தேறி வெளியிற் புகுந்து
வெறுவெளியின், னதியிற்படிந்து நடுப்பாழிற் புக்கி
நடனசபை, பதியிற் பதியச் சிவசத்திபாதம் பதிந்
திடுமே. கஎ

பதியாவுணர்விற் பகலிரவில்லாப் பரவெளியின்,
னிதியாகிய பொருளோர்மையிற்சொக்கி நிலைப் பொ
ழிந்து, துதியானதோத்திரம் பூசைதியானத் தொடர்
பிறந்த, கதியானதே சிவசத்தியின்பாத கமலமதே.

கமலமலரவுட் காலூன்றிமூலக்கனலெழுப்பித்
தமலங்கொளுத்தித் தணியநீருக்கித்தரித்தொளியி
மைலம்பெறநின்றறி யாதறிந்தருளாகியப்பா
னிமலநிறையுஞ் சிவசத்திநேச நிலைத்திடினே. கஅ

நிலைத்து நீங்காத நிலையிற் புகுந்து நிலைமுலைந்து,
தொலைத்துத்தொடர்பைத் தொடராத்தொடரிரண்டற்று
டர்ந்து நின்று, கலைத்துக்கணக்கைக் கருதாக் கருத்
தாய்க் கருதறிவை, வளைத்துவிழுங்குஞ் சிவசத்தியா
கிய வான்பொருளே. உ0

வான்பொருள் காற்பொருள் தீப்பொருணீர்ப் பொருண் மண்ணின்பொரு, ளான்பொருளரிப்பொருளம் புலிப்பொருளான வெல்லாந், தான்பொருளாகித் தனதிடமாகத்தனித்தனிக்கு, மேன்பொருளாஞ் சிவசத்தியதான விழுப்பொருளே. ௨௧

விழுப்பொருள் வேதத்தின் மெய்ப் பொருண் மெய்மை விளங்கநின்று, தொழுப் பொருளாக மச்சொற்பொருளச் சொன் முடிவிலுறம், பழுப்பொருள் பாசப்பசுப் பொருணித் தப்பதியாம் பொருள், சுழுப்பொரு ளியாவுஞ் சிவசத்தி பாதத் துகட்பொருளே. ௨௨

பாதத்துகளிற் பல்லாயிரத் தொன்றிற் பரந்ததையே, யாதிக்கமாகக்கொண்டாக்கியும் வேதாவகில மெல்லா, நீதிக்கமாய்த் திருமாலளித்து மரனீத் தொழித்தும், பூதிக்கமாக்கின் சிவசத்தியுண்மையைப்பேசுவதோ. ௨௩

பேசும்பெருமையும் பெற்றேவிளங்கியோர் பேச்சுமின்றி, யாசுஞ்சராசர மாக்கியளித்து மழிப்பதற்குக், கூசுமலத்தார்க் கிருளுமல்லாதவர் கூர்ந்தறிய, வீசும்பிரபையுஞ் சிவசத்தியாகிய மெய்யொளியே. ()

மெய்யாக்கு மெய்யாய் விளங்கவிளக்கி மெய் யேதுமில்லப்ா, பொய்யர்க்கும் பொய்யாய்ப் பொரு ந்தி மகிழப்பொய்யாயிருந்தே, செய்யுஞ் செயலதனு செய்யாமற் செய்து திரட்டிநின்றே, மையானதில்லை சிவசத்தியாகிய மங்கலைக்கே. உரு

மங்கலமான சிவசத்தி யானந்தவாரி யொன்று ய்ப், பொங்கிததும்புநிறை பூரணத்துட்புகுந்து நின் றே, நங்கட் கருளிலையென் றுரைப்பார் சொல்லை நா டிடினே, கங்கைக்குனின்றே விடாய்க்கு நீர்த்தேடுங் கணக்கிதுவே. உசு

கணக்கைக் கணக்காற் கணக்காயறிந்தே கணக் கொழிய மணக்குந்திருமுடித் தாமரைப்பூவின் வளர் மதுவை, பணக்கும்படம் விரித்தேறிப் புசிக்கப் பங விரவாங், குணக்குந்தவிருஞ் சிவசத்திபாதங் குளிர் சுகமே. உஎ

சுகமே சுகமாய்ச் சுகக்கடலாகித் துலங்குகின்ற
சகமேசிவசத்தி தன்னுருவாகவுந் தாங்குவதா
லகமாயுறையுஞ் சராசரமெல்லாமதன்றியுண்டோ
யுகங்கோடியாகவுணர்ந்து முணர்தல்சும்மாவுளதோ.

சும்மா விருந்தவிடத்திற் சுகஞ்சுகமாய்ப் பொருந்தி
யெம்மாயமென்பதறவே விளங்கு மியல்பதிலே
தம்மாய மாக்கியுந் தானொழிந்த தனியிடமே
யம்மா சிவசத்தியாதரவா மெனுமானந்தமே. உகூ

ஆனந்த மானந்த மற்புத மற்புதமாம் சுகமே
தானந்தமாதியு மற்றேவிளங்குந் தனிச்சுடரே
வானந்திகழ் சிவசத்தியதாகு மதியொளியே
மோனந்தரித்து முழுநிறைவாயறி மூடத்திலே. கூ0

மூடத்திருடனின் மூழ்கிநின்றார்க்கொளியேவிளங்கக்
காடத்திபூண்நெற் காட்டினடிக்குங்கருணைவளர்
நாடத்தொடருஞ்சிவசத்தி நோக்கிட நன்மலமாய்ச்
சூடத்தொளியாய்ச் செயன்முற்றுநீங்குந் துரிசறவே.

அறவே துறந்தவருந் தவர்க்கென்றுமறிவரிய
வுறவே சிவசத்தியுற்றிடிலோ தன்னையுற்றமலம்
புறவேநசித்துப்பேர்கெட லாக்கித்தன்பேரருளி
னறவேயளித்துடனாகி யெப்போதுநயந்திடுமே. கூஉ

நயந்துநயந்து நயவாநயமாய் நணுகி நிதம், பய
ந்தும்பயந்தும் பரிவிற்பரிவாய்ப் பரவிநின்று, வுயர்
ந்து முயர்ந்துமொளிக்கொளியாஞ் சிவசத்தியுன்னை,

வியர்தும் வியந்தும் வெளிப்படத்தோற்றி விழுங்கிடுமே. ௩௩

விழுங்கியு மண்ட சராசர மெல்லா விழுங்கடைவே, புழுங்குமுயிர்களைத் தத்தம் வினையிற் பொருந்திடவு, மொழுங்கின் முறையி னுடர்காண மூலவின்பமெலா, முழுங்கக் கொடுக்குஞ் சிவசத்தியை யார்மொழித லந்தோ. ௩௪

அந்தோ வீததிசய மதிசயமாஹாவரிதே, எந்த விதத்தினு மெவ்வுலகத்தினு மெத்துணையர், முந்த வளக்கமுடி வறியாச் சிவசத்திமுந்திச், சிந்தைக்குண் மேவியும் பந்தம்பறிக்குஞ் செயலதுவே. ௩௫

அதுவேயதுவா யறியுமறிவுக்கரியநின்ற, தெதுவோ வதைப்பல ரெத்தன்மையாக வியம்பிடினும், பொதுவே சிவசத்தி மெய்ப்பொருளாகிப் பொருந்திடுவ, ளிதுவேமறைகளெடுத் தெடுத்தேற்றி யியம்புவதே. ௩௬

இயம்புவதெப் பொருளப்பொருளெங்கும் விரிந்துநின்றே, சயம்பெறலாகித்தனியாகித்தான் தானே முழுது, நயம்பெறலாகி நடுவுமடிமுடி நாடி யொன்றாய்ச், சுயம்பிரகாச நற்றா வொளியாகுஞ் சிவசத்தியே. ௩௭

சத்திசிவத்தொடு தான்பிரிவின்றிச்சகமுழுதும், பத்தியியற்றிப் பயனளிக்கும்பலவகைத் தொழிலுஞ், சத்துங் கதிரு மொளியுந் தனியலாத் தன்மையைப் போற், சத்திசிவஞ் சிவசத்தி யொன்றுமெனச் சார்ந் ததுவே. ௩அ

சாரைம்புலனிற்றயங்கு மனதைத்தனித்தனியே
பாருமிதென்னப்பயனுளதோ பரிதாபமதே
சீருந்திருவுஞ்சிறப்பு மளிக்குஞ்சிவசத்தியைச்
சேரும்படிநிதந்தேர்ந்தே துதித்திடுஞ்செல்வருக்கே.

செல்வச்சிவசத்தி பாதாரவிந்தந்தினந் துதித்தே
வெல்லமலகன்மமாயை விரிவின்விளைந்ததனு
புல்குங்கரணபுவன போகங்கள்பொருந்திநின்று
நல்கும்வினையைநண்ணுமற் றுறந்து மெய்நாடிடவே.

நாடுநகருநலமும் புகழுநலம்புனைந்த
வீடுமனையும்பிள்ளையுஞ் சுற்றமும் விரும்பிநின்ற
மாடுஞ்சிவிகையுமற்றுள வாழ்வுமறவிவந்தா
லோடுஞ்சிவசத்திபாதார விந்தமுறுதியதே. ௪௧

உறுதியதாயுனைப்போற்றித் துதிக்கவொட்டாம லெனை, மறுதியதாகப்பிடித்து மலக்கிமய க்குவித்து,

வெறிதியதாக்கி வினையும்பெருக்கி விரிபுலனின், செ
றிதியக்கு மனச்சேட்டையொழிப்பாய் சிவசத்தியே.

சிவசத்தியே யென்னசெய்வேன்றினமுந்தினமு
மென்னைப், பவமூற்றுந்தீங்குயர்பாசத்தழுத்திப்பரவி
நின்று, நவமுத்தவாகியநானுவிதமாய்நரகிற்புகத், தவ
முற்றுமாய்க் குந்தவஞுமனதை நீதானொழியே. சங

ஒழியாப் புலன்வழி யோடிச் சுழன்று மூன்றே
திரிந்து பழியேசுமந்துபவத்தி லழுந்திப்பரதவிக்குங்,
குழியே நரகக் குடியாய்க் கொடுக்குங் கொடியமன,
வழியேசெலாதருள்வாய் சிவசத்தியெம்மன்னவியே.

மன்னவிமாதவி மங்கைபவானி மலைமடந்தை
முன்னவிநாயகி முதல்விமுக்கண்ணி மூதறிஞரு
ருன்னவியுன்மனி யுமையவள்பார்ப்பதி யுயர்ந்த
சின்னவிகன்னி சிவசத்தியான திரிபுரையே. சரு

திரிபுரைதேவி திகம்பரிசெல்வி சிறந்தவல்லி
பரிபுரைபௌரி பராசத்திபகவதி விசையை
விரிதிரைநங்கை வீரிவராகி விண்ணவிவிமலை
கரியுரிபோர்த்துஞ் சிவசத்தியாகியகண்மணியே. சசு

கண்மணி விண்மணி பொன்மணி நன்மணிக
ருதிநின்றோர்க், குண்மணியொன்மணியுறுமணிநின்

றுபடரோங்குமணி, தண்மணிசிறுமணிபருமணியெ
ன்றுஞ் சங்கையில்லாத், திண்மணி நவமணி சிவசத்
தியான சீர்மணியே. ௬௭

மணியேயொளியேமலரே மணமே மதுச்சுவையே
குணியேகுணமே குறியேகுணங்குறியற்றுநின்ற
துணியேசிவசத்தி தூவெளியாகிய தூநெறியின்
பணியேபணியாய்ப் பணியவல்லார்மிகபக்குவரே. ()
பக்குவம்பக்குவம் பையமனதின்பரப்படங்க
வுக்கிரநீங்கியொளிவழியே மிகவுண்மையதில்
மிக்கப்புகுந்து மெலிந்துதானற்றுவிரிந்துநின்றே
சொக்கத்தருஞ் சிவசத்தியினேர்சுகஞ்சொல்வரிதே.

அரிதே யரிதே யரிதரிதேயிந்த வாக்கைவரல்,
பெரிதேபெரிதே பெரிதே யிதன்பயன் பேசவென்று,
ஒரிதேசிவசத்தி யுண்மையைநோக்கி யொடுங்கியொ
ன்றாய்க், கரிதேகரிதாய்க் கலந்து களிக்கின்ற கார
ணமே. ருய

காரணகாரிய மூளதாயிளதாய்க் கருதவெங்குந்
தோரணவாரித் தொடர்பைத் துலக்கிச் சுழலொழிய
வாரணவாகம வாக்கமளித்தறிவாய் விளக்குப்
பூரணமான சிவசத்தியை யார்புகலுவதே. ருக

புகல்வதுங் காண்பதுங் கேட்பதுமோந்து பொ
ருந்துவது, மகமதின் சேர்க்கையதாகு மதுவுமணுக
நிதம், புகலுயிர்தானும் பொருந்திட வேண்டுந் தா
னே பொருந்தா, முகமதுவாய்ச் சிவசத்தி முயக்க
முடிகிடுமே. ருஉ

முடிகிடு மண்டரண்டப் புவனங்கண் முழுது
மெங்குங், கிடுகிடுத்தாடிக்கிளர்ந்து நெருங்கியேகேவ
லமாய்ப், படபடப்பல் வகைப்பல் லுயிர் பரவையும்
பாச மொன்றூற், றொடர நின்றூட்டுஞ் சிவசத்தியி
னுண்மை தோற்றுவதோ. ருங

தோற்றுமறையுந் தொடருமகலுஞ்சுழலநின்று
மாற்றுமயக்கு மறுக்கும்வழங்குமனதை யென்னூற்
சாற்றுந்தரமலத்தானே சலியத்தணியவுனைப்
போற்றும்படி சிவசத்தியருள்வாய் நற்புண்ணியமே.

புண்ணியராகிற் புவனம்பொருந்திப்போகம்புசிப்பர்
பண்ணியராகிற் பாவம்பலிக்க தீப்பவத்துழல்வர்
நண்ணியராக விரண்டும் புவியி னயந்திடுவ
ரெண்ணுஞ்சுகமாஞ்சிவசத்தியாருளெய்தினர்க்கே.

தினந்தினமாதரின்சேர்க்கைக்கினியநற்சிந்தையராய்த்
தனமிகத்தேடித் தளர்ந்துமருண்டு தடையுமற்று

மனமிக்வோடியேமாறு வினையைவளர்ப்பவர்தம்
மினமேசெலாதருள் சிவசத்தியாகிய வீஸ்வரியே. ()

ஈஸ்வரிமாதாவிறைவி பராசத்தியிணையில்பர
மேஸ்வரிமேதகி விடமிகல்யாணி விரிந்தபுவ
னேஸ்வரிநிமலைநிர்வாணி நிர்மலைநிஷ்க்களையுமா
மேஸ்வரிவிமலை சிவசத்தியாகிய வேதகியே. ருள

வேதகிசாதகித்தாயகி மாயகிவிரியநிறை
நாதகிகீதகி நாயகிகிலகி நடனசுக
போதகிசூதகி வாதகிபூதகி பெரியவெகு
மீதகிமாதகி சிவசத்தியாகிய வித்தகியே. ருஅ

வித்தாகு மைந்தொழில் விரியவொடுங்க மேவி நிதஞ், சத்தாய்ச்சித்தானந்தந்தானுய்த்துலங்கித் தனித்துநின்று, பத்தா யெத்தேவர்க்கு மேலாம் பதமாய்ப் பயிலவெங்குஞ், சித்தாய் நிறையுஞ் சிவசத்தியாகிய செம்பொருளே ருகூ

பொருளேபொறையே போக்கேவரவே புகழிகழ்வே
மருளேமயக்கே மதியேமலரேமணமே
தெருளேதிரளே திருவேசெறிவேதிகழுறவே
யருளேநிறைவே சிவசத்தியாகியவாறிவே. சூ0

அறிவேயறிவா யறியாதறியுமறிவி னிற்குங்
குறியேகுறியாக்குணமே குணங்குறியற்றுநின்ற
நெறியே நெறியாநிலையா நிலையினன்னேசமுற
மறியேசிவசத்தி தன்னுடன்கூடியே வாழ்ந்திடவே.()

வேறுயிருந்தும் விரிந்தும்விளங்கி வியப்பதுவு
மாறுயிருந்து மடக்கிமயக்கி மகிழ்வதுவுங்
கூறுயிருந்துமறவே முடிவிற் குளிர்சுகமாஞ்
சோறுயிருப்பதுஞ் சிவசத்தியாகுஞ் சொன்முடிவே.

முடிவுமுதலுமறவே விளங்கியமூடத்திலே
படியுங்கடந்து படிப்படியாகி யப்பார்வை யற்றுச்
செடியுங்கருகிப்பொரிந்து நீறுகிச் செயலுமற்றே
மடியும்படிக்கே யருவாய்சிவசத்தி மாசறவே. சுங

மாசேபெருக மதியுங்கெட மாதர் கண்வலையை,
வீசிப்பிடித்துப்பறித்துக்கசக்கி மெய்யால் வெதுப்பி,
யாசைப்படுத்தி யளராங்குழியி லழுத்தி யென்னை,
மோசஞ்செய்மாயை யொழிப்பாய் சிவசத்தி முடிந்தி
டவே. சுச

முந்திடவென்னை முயக்கிமயக்கி மொழிகுழறித்
தந்திடமிக்கத்தனத்தான்முகத்தாற் றளர்நடையாற்

சிந்திடநாடிப்பொருள்பொறி போகமெலாந்திருட
வந்திடுமாதர்மயக்கைச் சிவசத்திமாற்றுவையே. ௯௫

மாற்றுவ ராண்மை மயக்குவர் சிந்தையை மாச
றவே, தோற்றுவர் காட்டித் துடிப்பர் நடிப்பர் சுண
ங்கிநிற்பர், போற்றுவர் பொல்லா வினைம லிப்பூவை
யர் பொய்ம்முயக்கைச், சாற்றுவராரதைத் தீர்ப்பாய்
சிவசத்தி தாயகமே. ௯௬

தாயகமான சிவசத்தியே வுனைத்தான்மறந்து
பாயகமாகிப் பரவிச்சுழன்று பவம்புரிந்து
மாயகமாகி மறலிக்கிரையாய் மடியநின்ற்
றாயகமாகி நானிற்பதெக்காலந் துரிசறவே. ௯௭

துரிசா மனைமக்கள் சுற்றமும்வாழ்வுத் தொடர்
பையெல்லாம், வெறுசாம்படி கண்டு மெய்யா முணர்
வைமிகப்பொருந்திப், பெருசாமுனதுதிருவடித்தாம
ரைப்பேணிநிற்கும், பரிசானதையருள்சிவசத்தியான
பாக்கியமே, ௯௮

பாக்கியிருப்பும் வரவுஞ்செலவும் பகுத்தறிந்து,
நோக்கியிருப்பும் வரவுமொன்றாக்கி நொடி நொடியா
ய்த், தாக்கியிருத்தித் தனித்துச் செலவின் மேற்று

ளடைத்தாற், போக்கிரவில்லை சிவசத்திபாதம் பொருந்திடுமே. சுசு

பொருந்துநடுவிற் பெயராத மூக்கிப்பிடித்தெழுந்து
வருந்துங்கதியைச் சுழியிறசெலுத்தியே வாரிறுக்கிற்
திருந்துஞ்சபையிற்றிருநடனத்தி னர்சேவைதனை
யருந்தும் படிக்கேயருள்வாய் சிவசத்தியானறவே. ()

அறவேமதியை விதியாய்ச்சுழியி லடக்கியொன்று
யுறவேபொருத்தி யொளிச்சுழிபுக்கி யுயரெழுப்பி
நறவே மூனைக்கு ணயமாய்ப்புகுந்துநாதாந்தவெளி
பெறவேயருள்வாய் சிவசத்தியாகிய பேரணங்கே. ()

அணங்கும் புருடனுமாதரவா யடியிற்புகுத்திச், சுணங்கு மரவைச் சுடித்துக்கிளப்பிச் சுழற்றிவிட்டுக், குணங்கு மதியைப் பிடித்துக்குடித்து குளிர்ந்து நின்று, வணங்கும்படிக்கே யருள்வாய் சிவசத்தி மங்கலையே. எஉ

மங்குங்கலையை நிரப்பிச்செறிவி வளியின்முனைச்
சங்கங்குழல்தாள மத்தளம்வீணை தளதளத்துப்
பொங்கும்வழியிற் புகுந்தேறி நாதம்புரிவெளியிற்
றங்கும்படி யருள்சிவசத்தியாகிய தாண்டவியே. எங

தாண்டவியேயிறைதையல் பரானந்திசம்பைமதி
பூண்டவியாமளேகோமளேசாமளேபொருந்தியென்னை
யாண்டவியரசிய பிராமியாரணி யன்பருக்குத்
தூண்டவிவல்லி சிவசத்தியாகிய தூமயிலே. எச

மயிலே குயிலெழில் வார்குழலே வுனைவாழ்த்தி நிதம், பயில்வோரிடத்திற் பதிவாய்ப்பொருந்திப் பகலிரவுந், துயிலேதுயிலாத் துயிலிலடருஞ் சுகவொளியி, லொயிலாயொளிருஞ் சிவசத்தியாகிய வொள்ளிழையே. எரு

இழையின் மருங்கினளின்பந்தருபவ ளெவ்வுயிர்க்குங், கழையின்புயத்தினள் காபால சூலத்தினள் காந்துமொளி, குழைமின்செவியினள் கோலம் நிறைந்தகுமரியருண், மழையின்மிகுத்தவளாமே சிவசத்தி வார்குழலே. எசு

குழலே கறுத்தவள் கூரயிற்கண்ணினள் கொடியவருக், கழலேமிகுத்தவளாகஞ் சிறந்தவ ளல்லவர்க்குச், சுழலேமடுப்பவள் தோடணிக் காதினள்தொண்டருக்குக், கழலேகொடுப்பவள் சிவசத்தியான கண்ணுதலே. எஎ

கண்ணுதற்காதலி கன்னிகபாலி கருதுமுன்னே பண்ணுதற் கண்ணத்திமாமுகவனைப் பெற்றவள் பரிவா, லெண்ணுதற் கண்ணழலோன்றனைத் தந்தவளெண்ணரிய, நண்ணுதற் கண்ணழலாள் சிவசத்தியாம் நங்கையுமே. ௭௮

நங்கைநாராயணி நாகபாசத்தி நாகர்பணி
கங்கைகங்காளி காத்தியாயனி கமலாசனத்தி
மங்கைவராகி மாலினிமாதவி மாலின்னுரிய
தங்கைதயாபரி சிவசத்தியாகுந் தார்குழலே. ௭௯

தார்குழற்றையல் சயமகள்சண்டிகை தலைவிதனை
நேர்கிறைநீலி நிமலைநிர்வாணி நிட்களைநிரஞ்சனி
பார்புகழ் பண்ணவிபாரதி பைரவி பாலைக்கிழத்தி
சீர்சிவசிற்பரை சிவகாமிதேவி சிவசத்தியே. ௮௰

சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன்திகழுமணி, திவந்த மகேசன்மகேசி சிவனுமைசேர்திருமா, லுவந்துறழ் செல்வி பிரமன் சரஸ்வதி யுற்றவெலாங், குவிந்தும் விரியசிவசத்தியாகிய குண்டலியே. ௮௧

குண்டலிநாமகள் பூமகள்பார்ப்பதிகுலவுமுலா
மண்டலிமனோன்மனி விந்துபரைசத்தியாய்மலிந்தே
வண்டவி யண்டர்க்கு மரியா ளுரியா ளகம்புறமு
மூண்டலியுள்ளுணர் சிவசத்தியாகிய வோங்கரியே.

ஓங்காரிதாரகி யுயர்வியுணர்வி யொளிமிகுந்த
வாங்காரியக்ஷரி யுச்சரியகாரயுகாரி நிறை
ஸ்ரீங்காரிசர்வி சிவாக்ஷரியையை சிற்பரைதிகழும்
றீங்காரிமோனவி சிவசத்தியான விறையவளே. அக

இறையவளாகி யிறைவர்க் குகந்திடு மேந்திழை
யாய், மறையவளாகி மறைப்பொருளாகிய மாமறை
யின், றுறையவளாகி நற்றுவொளியாகித் தோனுங்
கமுத்திற், கதையவளாகியே நின்றுள் சிவசத்தி கார
ணமே. அச

காரணகாரிய முளதாயிலதாய்க் காணரிய
பூரணமாகிப் பொலிவாய்நிறைந்து பிரிதலின்றி
யாரணவாக மவளவாலறியு மாதரவாய்ச்
சாரணமாகத் தனித்தனியாகுஞ் சிவசத்தியே. அரு

சிவசிவ வென்று செபித்திடு மந்திரத்திற மறிந்தே, தவஞ்செயுந்தொண்டரைச் சாரைம்புலன்வழிதா னெருக்காப், பவமுழுதுமழலிற் பஞ்சதாய்ப்பறந்தே பொசிங்கி நவமிகவாச் சிவசத்தி யானந்த நாடிடுமே.

நாடுஞ் சிவசிவவென்றுரை கொண்டு நலஞ்சிறந்து
பாடுவதல்லபணிகுவதல்ல கண்பார்ப்பதல்ல
தேடுவதல்ல தியங்குவதல்ல தெருத்தெருவா
யோடுவதல்ல சிவசத்தியுண்மை யுரைப்பரிதே. அஎ

அரிதுமரிதல வப்பாலுக் கப்பாலது விரிந்தே
பெரிதும்பெரிதிற்சிறிதுஞ் சிறிதிற்குப்பேசவெங்குங்
கரிதுங் கரியாவிருந்துங் கருதா கணக்கதுவா
யுரிதுந் தருஞ்சிவசத்தியி னுண்மை யுள்ளுணர்வே.

உணர்விற் பொருந்து முணர்வாவ தெல்லா முடன்கழற்றி, புணர்விற்பிணங்கு முணர்வானதைப் போக்கடித்துமலர், துணர்விற்பொருந்துமணம்போ லுணர்வைத் துலக்கிமிக, விணர்விலிருக்கிற்சிவசத்தி யானந்த வின்பமதே. அ௯

இன்பச் சுகப்பெருக் கென்னறிவா லெடுத்தேற் றுவதோ, துன்பக் குரம்பையிற் சூழ்வே னதுவோ சுகக்கடலே, வன்பர்க்கருந்த வருந்தச் சுவையே வது மொழிவோ, வென்பக்குவர்சொலக் கூடாச்சிவசத்தி யின்னமுதே. கூய

இன்னலை நீக்கி யிருந்த விடத்தி லிருந்த சுகங், கன்னற் கரும்பின்னறுஞ் சாற்றைக் காச்சும் பாகோ கட்டியோ, பன்னற்குரிய தீம்பாலோ சுவையோபக ருநெய்யோ, வுன்னற்கடங்காச் சிவசத்தியொப்பிலா வாரிதியே. கூக

வாரிதியாஞ் சிவசத்தியி னனந்த வானமுதம், பாரிது பாலுநற்றேனுங் கனியுந் தேன்பாகு நெய் யும், நேரிதுசீனி கற்கண்டிவை நிறைய வொன்று, நீரிதை யொற்றதோ நீங்காச் சுகத்துறு நேர்மை யுமே. கூஉ

மையஞ் சுருங்கி மெய்வாருந் தளர்ந்து வளைந்து மிக, வையமொழுகி யவாவும்பெருகி யார்வங் குறை

ந்து, செய்யுஞ்செயலுந் தேராக்குணமாச் சேர்வதற்கு
மூனே, வுய்யத் தொழுமின் சிவசத்திபாத நாதத்
தொலியே. கூரு

நாதநாதாந்த நடனசிங்கார நடுமூனேமேல்
வேதவேதாந்த முடிவாஞ் சிவசத்தி மேவிநின்று
தாதந்தனுவெனத்தானே நடிக்குந்தரிசனத்தின்
போதந்தலைக்கொளப்பேச்சுமூச்சில்லைபொறியில்லையே

பொறியும்புலனுமெப் போக்கும்வரவும் புகழிகழ்வு
நெறியுநிலையி நெருங்குநிதியுநிதிப் பெருக்குங்
குறியுங்குணமுங் குலமுமணமுங் குடாதுநிற்ப
ரறியும்வழிசத்தியைக் காணுமடியவரே. கூரு

அடியாரிருக்குமிடத்தி லணுகியவர்பதத்தை
முடியால்வணங்கி மொழியாற்றுதித்து மூகமலரக்
குடியாயகத்தி லிருத்தி யெப்போதுங் குலாவிநிற்கும்
படியாயருள்வாய் சிவசத்தியான பராபரையே. கூசு

பராபரையான சிவசத்தியே யுந்தன் பார்வையத
தாற், சராசரத்தோற்றமுந்தானே விளங்கித்தனித்து

னிற்குங், தராதலமீதிற் றமியேன் செயலதுஞ் சார்ந்தி டுமோ,வுராவுரமாயுளனானேதத‌னையேமுன்னெழியே

ஒழியாப்பவக்கடலூசலிற் பட்டுழல்வேன்றனக்கு
வழியாவொருவரந் தந்திடவேண்டும் வழுத்தவுனே
மொழியாற்றுதித்துமுக்த்தான்மலர்ந்துமுழுமனதா
லழியாமலுன்னவுஞ் சிவசத்தியானவாரணியே. கூஅ

அணியு நற்கண்டிகை பூதியுஞ் சாந்த மனுதின மும், பணியுந்தொழிலே பகர்வதுன்வார்த்தைப்பார்ப்பதுனே. மணியும்பொருளு முன்றிருப்பாதம் வன் சுற்றமுனேத், துணியுமவரென்றருளாய் சிவசத்திசுந் தரியே. கூகூ

சுந்தரி நாரி குமாரி துரந்தரி சூரிமிக
வந்தரிவீரிய மரர்பயங்கரியாதி பரை
தந்தரிகோரி தயாபரியீஸ்பரி தைரிவெகு
கொந்தரிகூரிசிவசத்தியென்னை யாட்கொண்டருளே. கOO

வாழ்த்து.

வாழ்க சிவசத்தியா ரணவாகம மல்கிமிக
வாழ்கசிவசத்தி தண்ணருண்மாரி வழங்கின்று

வாழ்கசிவசத்தி மாநிதிச்செல்வ வளங்களெங்கும்
வாழ்கசிவசத்தி தன்னடியார்கள் மலிந்துநின்றே.

சிவசத்தித்துணை.

முற்றிற்று.

சுகமேலீடுவெண்பா.

அம்மம்மவென்னவாச்சரியமரைநொடியிற்
சும்மாவிருந்தவிடத் துற்றசுகம்—நம்மால்
ஏதுமன்றித் தானுமன்றி யேகபரானந்தமென
வோதலன்றி யுண்டோவுரை.